www.tamilarangam.net

# தூண்டில்

MILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 1




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்கலோ பொங்கல்

நீ
எத்தனையோ முறை
வந்து போகிறாய்
வருடத்திற்கு
ஒரு
புதுச்சேலை உடுத்திக்கொண்டு....

நாங்கள்
இன்னமும்
நிர்வாணமாகவே !

- சிவம்

www.tamilarangam.net

# அறிமுகம்

வணக்கம். "தூண்டில்" மூலமாக உங்களை சந்திக்கின்றோம். முதலில் நாம் அறிமுகம் செய்து கொள்வோம்.

1986ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து தென்னாசிய நிறுவனத்தின் தமிழ் செய்திக் குறிப்பு மாதம் இரு முறையாக வெளிவந்தது. மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழர்கள் அரசியல் தஞ்ச சட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும், வதந்திகளை நம்பிக் கொண்டிருந்தவர்கள் உண்மைச் செய்திகளை அறிந்து கொள்வதற்காகவுமே தமிழ் செய்திக் குறிப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1ம் இலக்கத்திலிருந்து 44ம் இலக்கம் வரை தமிழ் செய்திக் குறிப்பு வெளிவர முழுமையாக உழைத்தவர் திரு. பிரான்சிஸ் சேவியர். இவருக்கு உதவியாக செல்வன் நிக்கலஸ், செல்விகள் கலாவதி, கிறிஸ்ரீனா ஆகியோரும் பணிபுரிந்தனர். மிகுந்த சிரமங்களுடனும், சிலரின் எதிர்ப்புடனும் முழுக்க முழுக்க சிரமதானப்பணி மூலமே தமிழ் செய்திக் குறிப்பு வெளிவந்தது.

தொடர்ந்தும் தனியே செய்திகளை மட்டும் வெளியிடாமல் பயனுள்ள தகவல்களை அளிக்கும் நோக்கத்திலும், படிப்பில்லாமல் இருப்பவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் ஆக்கங்களை தருவதற்காகவும் தமிழ் செய்திக் குறிப்பு "தூண்டில்" என்ற சஞ்சிகையாக மாறுகிறது. எனினும் தமிழ் செய்திக்குறிப்புக்காக தொடர்ந்தும் சஞ்சிகையில் பக்கங்கள் ஒதுக்கப்படும்.

தூண்டிலில் பயனுள்ள, தரமான ஆக்கங்களையும், தகவல்களையும் சிக்க வைப்பது உங்களதும் பொறுப்பே. ஒவ்வொரு மாதமும் கலை, இலக்கியத் தேடலுக்கு தூண்டில் போட உங்களையும் அழைக்கின்றோம்.

எந்த அரசியல் கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் சார்பில்லாமலும், அதே சமயம் தேவையான அரசியல் கருத்துகளைக் கொண்டும், எந்த இன, மதத்துக்கும் சார்பில்லாமலும், அதே சமயம் மனிதாபிமான சார்பாகவும் இயங்கி வரும் தென்னாசிய நிறுவன வழியிலேயே தூண்டிலும் வெளிவரும். ஆக்கங்களை அனுப்ப விரும்புவர்களையும் இதே வழியில் வரும்படி அழைக்கின்றோம்.

இதுவரை தமிழ் செய்திக் குறிப்புக்காக பணியாற்றிய அனைவருக்கும் நன்றி கூறி தூண்டிலை பொறுப்பேற்கின்றோம். ஓவியப் பொறுப்பை ஏற்க முன் வந்த திரு. ரமணிக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தூண்டில் பற்றிய உங்கள் கருத்துகளை அனுப்பி வையுங்கள்.

– ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அன்புடன் தோழிக்கு,

நான் சுகமே உள்ளேன் என்று எழுத வேண்டிய அவசியமில்லை. உனது சுகத்தை விசாரிப்பதே எனது அவசரம்.

உன்னுடைய ஊரிலிருக்கும் நமது தோழியின் கடிதம் முப்பது நிமிடங்களுக்கு முன் என் கையில் கிடைத்தது. அவளுக்குப் பதில் போடாமல் உனக்கு எழுத வேண்டிய அவசியத்தை அவளின் கடிதம் உருவாக்கி விட்டது. ஆடம்பரமான ரெப்ரெக்கோடரில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த என்னை அந்தக் கடிதம் உலப்பி விட்டது. அதிர்ச்சியடைய வைத்து விட்டது. கடிதத்தைப் படித்தது முதல் இதோ இந்த நிமிடம் வரை கலங்கிக் கொண்டேயிருக்கிறேன். மனம் பதறிக் கொண்டேயிருக்கிறது. செய்த வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு கட்டிலில் உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் முன்னாலிருக்கும் கடிதத்தின் எழுத்துகள் நம்ப வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்போது கூட இவையெல்லாம் பொய்யாக இருக்கக்கூடாதா என்றே ஆசைப்படுகின்றேன். நானே இப்படிக் கலங்கும் போது உன் மனம் எப்படி கவலைப்படும் என்பதை இவ்வளவு ஆயிரம் மீற்றர்களுக்கப்பாலிருந்தும் என்னால் உணர முடிகிறது. இந் நேரம் நான் உன் அருகிலிருந்தால் கண்ணீரைத் துடைத்திருப்பேன். உன்னை அணைத்து ஆறுதல் படுத்தியிருப்பேன். கூடவேயிருந்து தைரியப்படுத்தியிருப்பேன். இவை வெறும் வார்த்தைகள் அல்ல என்று உனக்கே தெரியும். எமது நட்பைப் பற்றி எமது இதயங்களே பேசும்.

உங்களை விட்டுப் பிரிந்து நான் இங்கே வந்திருந்தாலும். என் நினைவில் நீங்கள் வராமல் போவதில்லை. நினைவுகள் மட்டுமே எங்களை இங்கே வாழ வைக்கின்றன. அவைகளும் இல்லையென்றால் நாங்கள் வெறும் ஜடங்களே. இப்போது மட்டுமென்ன, மெல்ல மெல்ல மாறிக்கொண்டுதான் வருகிறோம். இவைகளையெல்லாம் எழுதிப் புரியவைக்க முடியாதபடி மேற்கு நாடுகளைப் பற்றிய கற்பனையை அங்குள்ளவர்கள் மனதில் சிலர் பதித்துவிட்டார்கள். இங்கே பச்சையாக இருக்கும் என்று நம்பித் தானே நானும் வந்தேன். வந்தபின்தான் தெரிகிறது எமது இடத்திலுள்ள காய்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புல்லின் அருமை கூட இங்கில்லையென்று.

எங்கோ தொடங்கி எங்கோ வந்து விட்டேன். கடிதத்தில் மட்டுமல்ல. எல்லாவற்றிலுமே நான் இப்படித்தான். நான் தவற விட்டவைகள் எல்லாம் என்னோடு மோதுகின்றன. நாங்கள் ஒன்றாக இருந்த நாட்கள் எல்லாம் கொஞ்சமும் மங்காமல் நெஞ்சில் பதிந்திருக்கின்றன. நினைவுகளை நான் மீட்ட வேண்டியதில்லை. அவைகளே என்னை அழைக்க ஆரம்பித்துவிடும்.

என்னுடைய தோழிகளில் உன்னிடம் மட்டுமே நான் மனம்விட்டுப் பழகினேன். நெருங்கிப் பழகினேன். அதனால் எனக்குச் சில உரிமைகள் உண்டு. அவை இப்போது செல்லுபடியாகுமோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவற்றை உபயோகிக்க வேண்டியவளாக இருக்கிறேன்.

நாட்டில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை அறிய இங்கு பல வசதிகள் இருக்கின்றன. பத்திரிகை, தொலைபேசி, சஞ்சிகை, தகவல் நிலையங்கள் என்று பல இருந்தாலும் ஊரிலிருந்து வரும் கடிதங்கள் மூலமே உண்மைகளை அறிந்து கொள்கின்றோம். இதற்காகவே தபால்காரரைத் தினமும் வரவேற்கிறோம்.

இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டபொழுது இங்கேயிருப்பவர்களில் சிலர் உண்மையிலேயே சந்தோசப்பட்டோம். பெற்றோரை, பிள்ளைகளை, சகோதரர்களை, உறவினர்களைப் பார்க்கப் போகும் ஆசையில் இருந்தோம். ஆனால் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் எங்களுடைய ஆர்வத்தை உடைத்துவிட்டன. கற்பனைகளை அமுக்கிவிட்டன.

வெடிச் சத்தங்களை நீங்கள் நேரில் கேட்கிறீர்கள். இங்கே அவற்றை நாங்கள் பத்திரிகைகளில் கேட்கிறோம். இரத்தத்தை நீங்கள் நேரில் பார்க்கிறீர்கள். அதை நாங்கள் கடிதத்தில் மட்டுமே பார்க்கிறோம். மரணத்தை நீங்கள் தினமும் சந்திக்கிறீர்கள். அதை நாங்கள் அடிக்கடி கேள்விப்படுகிறோம். இந்த விசயங்களில் வேறுபாடுகள் இருப்பதைப்போலவே அங்கேயிருப்பவர்களினதும், இங்கேயிருப்பவர்களினதும் மன உணர்ச்சிகளும் வேறுபடுகின்றன. அங்கிருப்பவர்கள் சமாதானம், அமைதியைத் தேடுகிறார்கள். இவை கிடைத்துவிட்டால் இங்குள்ள தற்காலிக சுகம் போய் விடுமேயென்று கவலைப்படுபவர்கள் பலர் இங்கேயிருக்கிறார்கள். முரண்பாடுகள் அதிகரிக்க இடைவெளியும் அதிகரிக்கிறது.

மறுபடியும் நான் வேறெங்கோ போய் விட்டேன். சாதாரணமாகவே உணர்ச்சி வசப்பட்டுவிடும் நான் உன்னைப் பற்றிய கடிதத்தைப் பார்த்ததும் தடுமாறிவிட்டேன். குழம்பி விட்டேன்.

உனக்கு ஞாபகமிருக்கிறதா? பாடசாலையில் ஒருநாள் கற்பைப் பற்றி மாணவர்களுடன் சண்டை பிடித்தோமே. அப்போது நீ சொ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்ன கருத்துகளை நீயே மறந்திருக்கலாம். எனக்கு நினைவிருக்கிறது. கற்பு என்பதன் கருத்து மானம். அது இருபாலாருக்கும் பொதுவானது. ஆகவே கற்பு என்ற ஒன்றும் தங்களுக்கு இல்லையென்றும், அது பெண்களுக்கு மட்டுமே உரியது என்றும் ஆண்கள் சொல்லிக் கொண்டால் அது எங்களுக்குப் பெருமை தானே. வெட்கத்தை விட்டு தம்மைப் பற்றி பெருந்தன்மையாக ஒப்புக் கொள்ளும் ஆண்களை பாராட்ட வேண்டும் என்று நீ பேசியபோது மாணவர்கள் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்களே. நாங்களெல்லாம் கை தட்டி, கூச்சல் போட்டு உன்னை உற்சாகப் படுத்தினோமே. ஞாபகம் வருகிறதா?

இந்தப் பந்தியைப் படித்துக் கொண்டிருக்கும் போது உனக்குப் புரியும் இந்தக் கடிதம் எந்தக் காரணத்தோடு வருகிறதென்று. இனியும் சுற்றி எழுத விரும்பவில்லை. சில மிருகங்கள் உன்னை பலாத்காரம் செய்த செய்தியை தோழியின் கடிதத்திலிருந்து தெரிந்து கொண்டேன். அதனால்தான் இந்த அவசரக் கடிதத்தையும் எழுதிக் கொண்டிருக்கிறேன். உன்னைப் பற்றி எழுதியிருந்த தோழி இன்னொரு பயங்கரமான செய்தியையும் எழுதியிருந்தாள். மிருகங்களால் இம்சிக்கப்பட்ட பெண்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதாக அவள் எழுதியிருந்ததைப் படித்ததும் எனக்கு நெஞ்சில் வலியே வந்து விட்டது. பயங்கரமான சூழலில் உன்னைப் போன்ற பலர் இருக்கையில் எவ்வளவோ தூரத்துக்கப்பால் எதற்கும் உதவாமல் வெறுமனே இருப்பதை நினைக்க என் மீதே எனக்கு ஆத்திரம் வருகிறது.


எனக்குத் தெரியும் நீ எந்த விதமான கோழைத்தனமான முடிவும் எடுக்க மாட்டாய் என்று. ஆனால் உன்னைச் சுற்றியுள்ளவர்களே உன்னைக் கொன்று விடுவார்கள். உனக்கு மரணதண்டனை வழங்கும் நீதிபதிகளாக எல்லோரும் மாறி விடுவார்கள். உன்னைக் குழப்பி விடுவார்கள். மற்றவர்களின் முடிவை எடுக்க வேண்டியது தாமே என்பது போல நடந்து கொள்வார்கள். அவர்களால் உனக்கே விரக்தி வந்து விடும். யுத்தங்களினால் கட்டிடங்கள் மட்டுமே இல்லாமல் போயிருக்கின்றன. நமது மக்கள் காலம் காலமாகப் பேணி வரும் சில மூட நம்பிக்கைகளும், குருட்டுத்தனங்களும், நச்சு எண்ணங்களும், மிருகத்தனமான கொள்கைகளும் இன்னமும் அப்படியே பாதுகாப்பாக இருப்பதை நான் அறிவேன். எந்த துணையுமில்லாமலிருக்கும் உன்னை அவர்கள் சுலபமாகக் கலைத்து விடுவார்கள். தற்கொலைக்கு தூண்டிவிடுவார்கள். ஆகவேதான் இந்தக் கடிதம்.

அன்புத் தோழியே, உனக்குத் தைரியம் சொல்லும் தகுதி எனக்கில்லை. எப்போது நாட்டிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு வந்தேனோ அப்போதே எனது கோழைத்தனத்தை சாசனமாக எழுதிவிட்டேன். என்னால் உனக்குத் தைரியம் சொல்ல முடியாது. ஆனால் உன்னுடைய மனம் தளர்ந்து போகாமலிருக்க முயற்சி செய்ய முடியும். உனக்குள்ளிருக்கும் ஊக்கத்தை ஊக்கப்படுத்த முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

அன்புத் தோழியே, உனக்குப் பெரிதாக எதுவும் நடந்துவிடவில்லை. இதை முதலில் மனதில் பதிய வைத்துக் கொள். உன்னை விசர்நாய் ஒன்று கடித்து விட்டது. அதற்காக நீ தற்கொலை செய்து கொள்வாயா? இல்லை. கடிபட்ட காயத்திற்கு மருந்து போட்டுக் கொள்வாய். நாயின் விசர் பரவிடாமலிருக்க ஊசி போட்டுக் கொள்வாய். அவ்வளவுதான். தேகாரோக்கியத்திலோ, மனதிலோ எந்தக் குறைவும் ஏற்படப் போவதில்லை. அதே போலத்தான் உனக்கு இப்போது நேர்ந்த சம்பவமும். ஒரு மனிதன்தான் உன்னை பலாத்காரம் செய்தான் என்று எந்த சந்தர்ப்பத்திலும் நினைத்துக் கொள்ளாதே. ஏனென்றால் அப்படி நடக்கவில்லை. மிருகங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளவே மனிதன் சில கட்டுப்பாடுகள், வரைமுறைகள், ஒழுங்குகளை உருவாக்கியிருக்கிறான். இவற்றை மதிக்காதவர்கள், மீறுபவர்கள் தமக்கும், மிருகத்துக்கும் எந்த வேறுபாடும் இருக்கக் கூடாது என விரும்புபவராகவே இருப்பார். அவரே அப்படி விரும்பும்போது நாம் மட்டும் ஏன் அவரை மனிதன் என்று கணிக்க வேண்டும். ஆகவே உன்னை இம்சித்தது மிருகம்தான். மிருகமேதான். உன்னைவிட மிருகம் பலம் வாய்ந்திருந்ததென்பதால் உன்னால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. அதற்காக உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்பதைப் போலப் பைத்தியக்காரத்தனம் வேறெதுவும் இல்லை. ஒரு நாயை உதாரணம் காட்டி மேலே எழுதியிருக்கிறேன். அதைப் போலவே காயங்களுக்குச் சிகிச்சை செய்து கொள். நீ விரும்பாத ஒன்று வளருவதாகத் தெரிந்தால் ஆரம்பத்திலேயே அழித்துவிடு. நடந்த சம்பவங்களை மனதிலிருந்து துடைத்துக் கொள்.

எனக்குத் தெரியும். இவ்வளவு நாளும் உன்னைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தவர்களெல்லாம் இனித் தேடி வருவார்கள். துக்கம் விசாரிப்பார்கள். பரிதாபப்படுவார்கள். வெளியில் விளம்பரப்படுத்துவார்கள். சிரித்துக் கொள்வார்கள். நீ இல்லாமல் போகும்வரை உன்னைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

முதலில் இவர்களைப் புரிந்து கொள். சுதந்திரத்துக்காக சிந்தப்படும் ரத்தத்திலும் தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளாத காட்டுமிராண்டிகள் இவர்கள். அநியாயமாக மரணித்துப் போகும் தியாகிகளின் உயிர்களாலும் திருப்தியடையாத சாத்தான்கள் இவர்கள். இவர்களுக்கேற்பவா நீ உனது முடிவுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நன்றாக யோசி. நீ அநாதரவாக நின்றபோது இவர்கள் வரவில்லை. நீ காயப்படுத்தப்பட்டபோதும் இவர்கள் வரவில்லை. இப்போது மட்டும் வந்துவிடுவார்கள். இன்னுமா உன்னால் இவர்களைப் புரிந்து கொள்ள முடியாது.

மற்றவர்களுடைய தலையை நிமிர்த்தி ஆறுதல் சொல்ல யாரும் முன்வரமாட்டார்கள். தலையை குனிய வைப்பதற்குப் பலர் போட்டி போடுவார்கள். மனிதத்தோல் போர்த்திய மிருகங்களை உன்னால் இனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டு கொள்ள முடியும். உன்னை எனக்கு நன்றாகவே தெரியும். முதலாம் வகுப்பிலிருந்தே இணைபிரியாத தோழிகள் நாம். ஆரம்பத்தில் சாப்பாட்டைப் பகிர்ந்து பின்னர் மனங்களையே பரிமாறிக் கொண்டோம். உன்னுடைய கொள்கைகள், எண்ணங்கள் எல்லாமே எனக்குத் தெரியும். ஏனென்றால் அவைதாமே என்னுடையவையும்.

நான் உனக்குப் புதிதாக தைரியத்தை உண்டாக்கவில்லை. உனக்குள்ளிருக்கும் சக்தியை தட்டி எழுப்புகிறேன். ஏனென்றால் அதை உறங்க வைக்கப் பலர் முயன்று கொண்டிருப்பார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களை மட்டும் தொடரவிட்டால் எப்படியும் உன் சிந்தனைகளை கலைத்து விடுவார்கள். அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுபவர்கள் அவர்கள். நானும் அவர்கள் வழியிலேயே வரப் போகிறேன் உனக்கு ஆதரவளிப்பதற்காக. இப்படியான கடிதங்கள் உனக்கு தொடர்ந்து எழுதுவேன். அனுப்பிக் கொண்டேயிருப்பேன். உன்னிடமிருந்து திடமான பதில் வரும்வரை நான் உனக்கு எழுதிக் கொண்டேயிருப்பேன். உன்னை பலிகொடுப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

மறுபடியும் நினைவு படுத்துகிறேன். உனக்கு நடந்தது தற்செயல் விபத்தே. தயவு செய்து அதை மறந்து விடு. காயங்களுக்கு மருந்து போடு. தேவையான வேறு சிகிச்சைகளையும் செய்து கொள். நீ பழையபடி மாறிவிடுவாய். உன்னை எனக்குத் தெரியும்.

உன்னைக் கீழே அழுத்த நினைப்பவர்கள் நடந்த செயலுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களே. அவர்களும் பல்லில்லாத மிருகங்களே. அவர்க களை கவனத்தில் எடுக்காதே. அவர்களை லட்சியம் செய்யாதே.

உன்னைப் போல இன்னும் பல பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். அவர்களில் உன்னைப் போல் தைரியசாலி இல்லாமலிருக்கலாம். அப்படியானவர்களுக்கு உன்னுடைய உதவி நிச்சயமாகத் தேவை. அவர்களைப் பற்றிய செய்திகளைத் தேடு. அவர்களுடன் தொடர்பு கொள். நீங்கள் எல்லோரும் இணைந்து கொள்ளுங்கள். அநியாயத்தால் இம்சிக்கப்பட்ட இதயங்கள் இணைவதற்கு எந்த தடைகளும் இருக்காது. நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டால் அப்புறம் மற்றவர்களின் புலம் குன்றிவிடும். உங்களைப் பார்த்து யாரும் பரிகசிக்க மாட்டார்கள். பரிதாபப் பட மாட்டார்கள். விளம்பரப்படுத்த மாட்டார்கள். உங்கள் பலம் நிச்சயம் அவர்களை விலத்தும். தடுக்கும். பயமுறுத்தும்.

நாட்டில் இன்னும் ஜனநாயகம் எங்காவது ஒளிந்திருக்குமானால் நடந்த செயல்களுக்காக நியாயம் கேட்டு நீங்கள் போராடிப் பார்க்கலாம். அதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லையென்றால் ஏனைய பெண்களையும் இப்படியான விபத்துகள் சந்திக்காவண்ணம் முற்கூட்டியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

இப்போது உனக்கு நன்கு புரியும். நீ செய்ய வேண்டியவைகள் எவ்வளவோ இருக்கிறதென்று. ஆகவே நீ வாழ வேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். உன்னை நம்பி பல அபலைகள் இருப்பதாக கற்பனை செய்து பார். உனக்கே நம்பிக்கை பிறக்கும். வாழ வேண்டும் என்ற உறுதி பிறக்கும். உற்சாகம் வரும். அதன் பின் உன்னால் சாக முடியாது. பொது வாழ்வில் உன்னை ஈடுபடுத்திக் கொண்டால் அது உன் பிரிவை அனுமதிக்காது. உன்னாலும் விலக முடியாது. ஆகவே அதுதான் சரியான வழி. நன்றாகச் சிந்தி. பக்கத்திலிருப்பவர்களுடன் ஆலோசிக்காதே. தனியாகவெ யோசி. உனது எண்ணங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. அவை நிச்சயம் வெளியே வரும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஒற்றுமையாக இருந்த எருதுகளை இரையாக்கிக் கொள்ள முடியாத சிங்கம் தந்திரமாக அவற்றைப் பிரித்து உணவாக்கி கொண்டதை நாங்கள் படித்திருக்கிறோம். மற்றவர்களும் படித்திருப்பார்கள். அப்படிப் படித்தவர்கள்தான் இன்று ஒற்றுமையின்றி தனித்தனியாகப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இன்று, இந்த நிமிசம் வரை உயிர்கள் பலியாவதற்கு காரணம் ஒற்றுமையின்மையே. இதைப் புரிந்து கொள்ளவும் யாரும் முயற்சிக்கவில்லை. புரிய வைக்கவும் முயற்சிக்கவில்லை.

இந்த உதாரணங்களை கவனத்தில் எடுத்து அதற்கேற்ப உனது செயல்களை அமைத்துக் கொள். ஒற்றுமையும், புரிந்துணர்வும் இருந்தால் வேறெதுவும் தேவையில்லை. எல்லாய் பெண்களும் ஒன்றாக இணைந்து கொள்ளுங்கள். உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்து மேலும் பலர் சேர்ந்து கொள்வார்கள். இது கற்பனையல்ல. நடக்கக் கூடிய ஒன்றேதான். உன்னால் முடியும். நீ முயற்சிப்பாய்.

உங்களுக்குத் தேவையான பொருளாதார உதவிகளை நான் இங்கிருக்கு மட்டும் செய்வேன். இத்துடன் நின்று விடுவேன் என்று நினைத்து விடாதே. நாட்கள் கடந்தாலும் உங்களுடன் நான் இணைந்து கொள்வேன்.

கடிதத்தை முடிக்கு முன்னர் இன்னுமொன்று. இங்கே ஆண்கள் யாரும் இருப்பதாக நினைத்து விடாதே. மீசையுள்ளதால் மட்டுமே ஆணாக இருப்பவர்கள்தான் இங்கேயிருக்கிறார்கள். இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதற்குக் காரணம் இங்கிருப்பவர்கள் திரும்பி வந்து பெரிதாக ஏதாவது செய்வார்கள் என்று அங்கிருப்பவர்கள் எதிர்பார்க்கக் கூடாதே என்ற கவலையில்தான். அன்புத் தோழியே, மற்றவர்களை ஒருபோதும் எதிர்பார்க்காதே.

நடைமுறைப் பிரச்சினைகளால் உன்னிடமிருந்து எனக்கு கடிதம் வரா விட்டாலும் நான் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருப்பேன். எனக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியும் என்றுவது ஒருநாள் உன்னிடமிருந்து கடிதம் வருமென்று. இப்போது தற்காலிகமாக விடை பெறுகின்றேன்.

என்றும் உன் அருயிர் தோழி

.............!..

மே. ஜெர்மனி.

# சில குறிப்புகள்

## இரவல் பகுதி

நல்ல, பயனுள்ள தகவல்கள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். பலருக்கு எல்லாப் புத்தகங்களையுமே வாசிப்பதற்கு வசதியிருப்பதில்லை. எனவே எமக்குக் கிடைக்கக் கூடிய தகவல்களை, கிடைக்கும் வேறு புத்தகங்களிலுள்ள விசயங்களை மற்றவர்களும் அறிய வேண்டுமென்பதற்காக இரவல் பகுதி என்ற தலைப்பில் பிரசுரிக்கின்றோம். சாத்தியமானால் வேறு மொழிகளில் வரும் தகவல்களும் மொழிபெயர்ப்புடன் இடம் பெறும். வேறு சஞ்சிகைகள், வெளியீடுகள், புத்தகங்களில் பயனுள்ள அம்சங்களைக் கண்டு பிடித்தால் எமக்கு அனுப்பி வையுங்கள். மூலப் பிரதிகளின் புகைப்படப் பிரதியாக்கலே விரும்பத்தக்கது. நீங்கள் அனுப்புவது எந்தப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது, யாரால் எழுதப்பட்டது, வெளியீட்டாளர்களின் முகவரி போன்ற விபரங்கள் தரப்பட வேண்டும்.

## நூல் அறிமுகம்

இப் பகுதியில் ஈழத்தவர்களின் இலக்கிய முயற்சிகள் அறிமுகம் செய்யப்படும். மேற்கு நாடுகளில் வெளிவரும் ஈழத்தவர்களின் சஞ்சிகைகள், வெளியீடுகளில் ஒவ்வொரு பிரதி எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை இப் பகுதியில் அறிமுகம் செய்வோம்.

## சிறுகதை, கவிதை

சிறுகதைகள் அனுப்ப விரும்புவபர்கள் புல்ஸ்கப் தாளில் 8லிருந்து 9பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதியனுப்ப வேண்டும். தாளில் ஒருபக்கத்தில் மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதியனுப்புதல் விரும்பத்தக்கது.சுக்கதாரரின் பெயர், முகவரி தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.தமிழ் சமுதாயத்தில் காணப்படும் பிரச்சினைகளைக் கருப் பொருட்களாகக் கொண்ட கதைகள், கவிதைகளை அதிகமாக எதிர்பார்க்கின்றோம்.

கட்டுரைகள்

சிறு கட்டுரைகள் 4லிலிருந்து 5பக்கங்கள் வரையும், தொடர் கட்டுரைகள் 10லிருந்து 12பக்கங்கள் வரையும் எழுதப்படலாம்.தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுதல் விரும்பத்தக்கது.கட்டுரைக்காக கீழே தரப்பட்ட சில விடயங்களை சிபாரிசு செய்கிறோம்.இவை தலையங்கங்கள் அல்ல.

1. அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் சிறுவர்களின் எதிர்காலம்?
2. அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழர்களின் எதிர்காலம்?
3. இங்கிருப்பவர்கள் நாடு திரும்பிய பின் எதிர் கொள்ள இருக்கும் பிரச்சினைகள்?
4. இலங்கையின் தமிழ் பகுதிகளின் புனருத்தாரணத்துக்கு நாம் எப்படி உதவலாம்?
5. இலங்கையிலிருக்கும் அகதிகளுக்கு எப்படி உதவலாம்?
6. இங்கிருப்பவர்கள் நேரத்தை எப்படி பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

இங்கு குறிப்பிட்டுள்ள அம்சங்களை விட வேறு எவற்றை சேர்த்துக் கொள்ளலாம்?அவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டியதற்கான காரணங்கள், உங்கள் ஆலோசனைகளை எழுதியனுப்புங்கள்.

---

(39 ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி, சமாதானம் வராதா என காத்திருக்கிறார்கள்.

ஆ.கு – இங்கேயிருப்பவர்களுக்கு(மேற்கு நாடுகளில் தஞ்சம் கோரியிருப்பவர்களுக்கு)என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

தேவ – வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களின் பரிதாப நிலையைப் புரிந்து கொள்ளுங்கள். எல்லோரும் நீங்களாகவே அவர்களுக்கு உதவி செய்ய முன்வாருங்கள். உதாரணமாக மருந்துகளில்லாமல் சிரமப்படும் வைத்தியசாலைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்கள் மருந்துகளை வாங்குவதற்குத் தேவையான உதவிகளைச் செய்யலாம். உங்களால் முடிந்தவழிகளில் உதவலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரியுமா?

1. பாகிஸ்தான் தோன்றியது எப்போது?
2. சத்தம் போடாத பிராணி எது?
3. சூரியனுக்கு மிக அருகிலுள்ள கிரகம் எது?
4. முதன் முதலாக கலங்கரை விளக்கம் எங்கே கட்டப்பட்டது?
5. ரஷ்யப் புரட்சி நடந்தது எப்போது?
6. இடம் விட்டு நகராத பூச்சி எது?
7. சுதந்திர தேவி சிலையை அமெரிக்காவுக்குக் கொடுத்த நாடு எது?
8. குடிநீரைச் சுத்தப்படுத்தும் வாயுவின் பெயர் என்ன?
9. லீப் வருடத்தை உருவாக்கியவர் யார்?
10. இந்தியா என்ற பெயர் எப்படி வந்தது?
11. உலகிலேயே மிக உயரமாக வளரும் மரம் எது?
12. வைரத்தைக் காட்டிலும் உஷ்ணம் தாங்கக் கூடிய பொருள் எது?
13. ஈரான் நாட்டின் இன்னொரு பெயர் என்ன?
14. நான்கு கால் பிராணிகளில் மிக வேகமாக ஓடக் கூடிய பிராணி?
15. பிறேசில் நாட்டில் பேசப்படும் மொழி என்ன?

விடைகளை அறிய வேண்டுமாயின் புத்தகத்தை தலைகீழாகப் புரட்டியே ஆக வேண்டும். மேலாக பார்ப்பதுடன் நின்று விடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்களா?

விடைகள்

1. 1947 ஓகஸ்ட் 14
2. ஒட்டகச் சிவிங்கி.
3. வெள்ளி
4. எகிப்தில்.
5. 1917ல்.
6. பவளப் பூச்சி.
7. பிரான்ஸ்.
8. குளோரின்
9. ஜூலியசீசர்.
10. பாரதத்திற்கு முதல் முதல் வந்த அந்நியர்கள் சிந்து நதிப் பிராந்தியத்தையே அறிந்திருந்தார்கள். அதனை அவர்கள் தமது மொழியில் 'இந்தஸ்' என்றழைத்தார்கள். இதுவே பின்னர் இந்தியா ஆயிற்று.
11. யூகலிப்ஸ்.
12. போரசன்.
13. பாரசீகம்
14. வேங்கைப் புலி.
15. போர்த்துக்கல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வானம் தெரியும் வரை

சுதந்திரமே
உனக்கு கடிதம் போட்ட
எல்லோர் வீடுகளிலும்
ஒரு
துளைக்குப் பின்தான்
சுகம் விசாரித்திருக்கிறாய்

எங்கள் வீட்டில்
எத்தனையோ
துளை.
அது முகவரியையே
உனக்கு
மூடிவிட்டதா?

எங்களை
எண்ணிப்பார்த்து
அந்த
சகாராவே சகதியாகிறது.

மானுடமே
இனியேனும்
மனிதருக்குள்
உருகி ஓடு.

உன்னை
மூடிக்கிடக்கும்
மண்டையோடுகளை
தூர எறி.

எத்தனையோ
துரிபச் சாவுகள்
வானமே
இருளுக்கு இரையானது.

குருதிக்குள் நின்று
வெண்புறாவைத் தேடுகிறோம்
குருதியே
வெண்புறாவினுடையதுதான்.

நின்று போன
எங்கள் மூச்சில்
மரணம்
சுவாசிக்கிறது.

தொலைந்து போன
சூரியனை
தேடுகிறோம்
கண்களை கருக்கிவிட்டு.

எங்கள் நெஞ்சம்
கனவுகளின்
காலாக்கிரகம்
வெளியே வந்தால்
கனவுகளுக்கும்
கை விலங்குதான்
இது
எதுவரை?

கிழக்கில்
விளக்கை
ஒளித்து வைத்திருக்கும்
வானம்
தெரியும் வரை.

சிவம்

www.tamilarangam.net

## சிவம்

ஒற்றுமைக்கு தொட்டில் கட்டி
ஒரு கோடி யுகமானது
குற்றமற்ற குழந்தையது
கர்ப்பத்திலே கரைந்துபோனது
வேற்றுமைக்கு வேட்டி கட்ட
வெற்றித்தேவி முடியிழந்தாள்
நாற்றுநட களை வளர்ந்து
நட்ட நெல்லு விளையவில்லை.

விடுதலைக்கு விளக்கெரித்தோம்
வேதனைக்கு குழிபறித்தோம்
விடியுமுன்னே விளக்கணைந்ததேன் - நாம்
வேதனையை மணமுடித்ததேன்
வடு வளர்ந்து காடாகி
வாழ்வெல்லாம் இலையுதிர்வோ
நெருஞ்சாரம் பெரும்பாரம்
நிம்மதியேன் கருங்கோபம்

கொலைபெருகி சிதை கருகி
குருதியோடி அருவியானதே
நிலமானம் சருகாகி
நீள்கடலில் துரும்பானதே
நிலைமாறி நிலம் மீள
நம் இனம் போராடுதே
மலைமுகட்டில் என்றோ ஒருநாள்
மானடத்தின் கொடி ஆடுமே.

# ஒற்றுமை



www.tamilarangam.net

Das 'Südasienbüro' ist ein gemeinnütziger Verein. In ihm sind 'Dritte-Welt-Gruppen', Asylarbeitskreise und engagierte Einzelpersonen zusammengeschlossen, die mehr über die Entwicklungen in den Ländern **Sri Lanka, Bangladesh, Indien und Nepal** wissen wollen. Die Arbeit des Büros baut auf den Aktivitäten des 'Sri Lanka Coordination Centre', Kassel, auf (das Büro besteht nicht mehr), das seit 198o einen losen Zusammenschluß von Gruppen bildete, die besonders mit Sri Lanka befaßt waren. Aus dieser Vorgeschichte und der Tatsache, daß tamilische Asylbewerber zur größten Flüchtlingsgruppe in der Bundesrepublik zählen, ergibt sich, daß die Öffentlichkeitsarbeit zur Situation in Sri Lanka - allerdings nicht nur bezogen auf Tamilen - ein wichtiger Schwerpunkt der Arbeit des Büros ist. Über das Büro können u.a. bezogen werden:

- Das 'Südasieninfo', erscheint in 8 Nummern pro Jahr zum Jahresbezugspreis von DM 36,-- (einschl. Porto),
- Das 'Kurzinfo' (nur für Mitglieder), erscheint ca. alle 2 Wochen als internationaler Pressespiegel (Preis: siehe Mitgliedsbeitrag).
- Medien (Filme, Dias),
- Weitergabe von Medien und Dokumenten aus dem Archiv,

Mehrmals pro Jahr gibt das Büro Dokumentationen heraus. Veröffentlichungen 1985 und 1986:

- Sri Lanka - Zeugen sagen aus/Menschenrechtsverletzungen im Jahre 1984, 80 S., 6,-- DM,
- Der autoritäre Staat - Die Institutionalisierung von Gewalt in Sri Lanka, 2. Auflage, Februar 1986, Preis: 3,-- DM,
- Lehren aus Bhopal - Ein Jahr nach dem Giftgasunglück, Januar 1986, 86 S., 7,-- DM.

Das 'Südasienbüro' organisiert Veranstaltungen und Seminare und vermittelt Referent(innen)en.

(Der Mitgliedsbeitrag beträgt monatlich 5,-- DM für Studenten/Arbeitslose/Asylbewerber; lo,-- DM für Erwerbstätige. Der Beitrag schließt folgendes ein: 1. 'Südasien-Info', 2. 'Kurzinfo', 3. alle Dokumentationen, die veröffentlicht werden).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திக் குறிப்பு இல. 45 + 46

(வீரகேசரிச் செய்திகள்)
04.12.87

யாழ் பண்ணைப்பால வீதி மீண்டும் திறக்கப்பட்டு யாழ் - தீவுப் பகுதிப் போக்குவரத்துச் சேவை நடைபெறுகிறது.

வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் கொள்ளையடிக்கும் கும்பலின் அநியாயங்கள் தொடர்கின்றன. இவ் வழியால் வரும் பயணிகள் அனைவரும் உடைமைகளைப் பறிகொடுத்து வெறுங்கையுடன் வருகிறார்கள்.

"யார் தம்மைப் பாதுகாப்பார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினார்களோ அதே படையினராலேயே அவர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். வடக்கு, கிழக்கில் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்படுகின்றனர். தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தாலும், பயங்கரவாதிகளாலும் அனுபவித்ததை இப்போது இந்தியப்படையினரால் அனுபவிக்கின்றனர்" - அநுரா பண்டாரநாயக்க.

05.12.87

மோட்டார் சைக்கிள் பாவிப்பவர்கள் தலைக்கவசம் (கெல்மெட்) அணிவது நாடெங்கும் 04.12 முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. கெல்மெட் அணிந்து சென்றவர்கள் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டு இனிமேல் கெல்மெட் போட வேண்டாமென பணிக்கப்பட்டுள்ளனர்.

"இந்திய இராணுவம் தெற்கில் நுழையும் தினம் இங்கொரு வியட்நாம், ஆப்கான் உருவாகும். நான் வெளிவிவகார அமைச்சராக இருந்தால் பதவியை இராஜினாமா செய்துவிட்டு உருளைக்கிழங்கு நட்டுப் பிழைத்திருப்பேன்" - மத்துமம எம்.பி

07.12.87

திக்குவெல்லைப் பகுதியில் கிராமோதயசபைத் தலைவர்களுக்கும், தெவிநுவரையில் உள்ளூராட்சி மன்றத்திற்கு விண்ணப்பம் கோரியிருப்பவர்களுக்கும் அப் பதவிகளிலிருந்து தாங்கள் விலகிக் கொண்டதாக தமது கையெழுத்துகளால் எழுதப்பட்ட சுவரொட்டிகளை பகிரங்க இடத்தில் ஒட்டவேண்டும் என்று தென்பகுதி தீவிரவாதிகளால் எச்சரிக்கை விடப்பட்டது. இதனையடுத்து தாம் பதவியைத் துறந்துள்ளதாக அப் பிரதிநிதிகள் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைகளினால் எழுதப்பட்ட பகிரங்க அறிவித்தல்களை சுவர்களில் ஒட்டியுள்ளனர்.

யாழ் மாவட்டத்திற்கான தனியான க.பொ.த. பரீட்சை ஏப்ரல் மாதத்தில் நடைபெறலாம்.

தொடரும் தேடுதல் வேட்டைகளினால் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம், கோண்டாவில், திருநெல்வேலி, சிவன், அம்மன் கோவில்கள், அச்சுவேலி கத்தோலிக்க தேவாலயங்கள், ஒஸ்மானியா கல்லூரி ஆகிய இடங்களில் சுமார் 35 ஆயிரம் பேர் இப்போதும் அகதிகளாக இருக்கின்றார்கள்.

சர்வோதய இயக்கமும், இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

09.12.87

இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கையின்போது ஒத்துழைப்பு வழங்கக் கூடாதென்றும், மீறிச் செயற்பட்டால் மரணதண்டனை வழங்கப்படுமென்றும் விடுதலைப்புலிகளினால் மட்டக்களப்பிலுள்ள கிராமசேவை அலுவலர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கொழும்பு பொலிஸ் மத்திய கராஜில் 1 இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த உதிரிப்பாகங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

"அமெரிக்க விஜயம் வெற்றி பெற ஆண்டவன் எங்களுக்கு உதவ வேண்டும்" — கொர்ப்பச்சேவ்.

12.12.87

சம்மாந்துறை, வளாத்துப்பட்டி, அசம்பாவிதங்களையடுத்து 1,500 பேர் அகதிகளாகியுள்ளனர். இவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு உடமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய், நவாலி, சுதுமலை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள மக்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியிருக்கிறார்கள். இப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதால் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

மூளைக்காய்ச்சல் வவுனியா, கிளிநொச்சியில் வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை இந் நோயால் 7 பேர் இறந்துள்ளனர். 31 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் போலியோ பரவுகிறது.

14.12.87

வவுனியா நகரிலும், பஸ் நிலையங்களிலும், புகையிரத நிலையத்திலும் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் வாகனங்களை தடுத்து பயணிகளை கடும் சோதனைக்குள்ளாக்குகின்றனர். சிலரை விசாரணைக்கென அழைத்

www.tamilarangam.net

துச் செல்கின்றனர். 12.12.87ல் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். வட பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் தப் பிவருவதைத் தடுக்கவே இந்தச் சோதனைகள் என சோதனையிலீடுபட்ட இயக் க இளைஞரால் காரணம் சொல்லப்பட்டது.

கொக்குவில், கோண்டாவில், இணுவில், மானிப்பாய், பருத்தித்துறை, உடுப்பிட்டி ப குதிகளில் தொடர்ந்தும் சிறு மோதல்கள் நடந்து வருகின்றன. மக்கள் ஆலயங்க ளில் தஞ்சமடைந்துள்ளனர்.

15.12.87

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 100 குடும்பங்கள் நிவாரண உதவிகள் கிடை க்காமல் கஷ்டப்படுகின்றன.

முல்லைத்தீவுப் பகுதியில் பரவி வரும் மலேரியாவினால் கடந்த ஒரு மாதத்தில் 50 பேர் வரை பலியாகியுள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை. நோயாளிகளைக் கொண்டு செல்ல போக்குவரத்து இல்லை.

இராணுவத்தின் கெடுபிடிகளால் தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை பகுதிகளி லிருந்து மக்கள் வெளியேறி காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். 50க்கு மேற்பட் டோர் கொல்லப்பட்டனர்.

16.12.87

நவசமசமாஜக்கட்சி, லங்காசமசமஜக் கட்சி, கொம்யுனிஸ்ட் கட்சி, மக்கள் கட் சி ஆகிய தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகள் இணைந்து அமைத்துள்ள கூட்டணி யில் தமிழ் இயக்கங்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியவையும் சேர்க் கப்பட இருக்கின்றன. இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை தென்னிலங்கை தலைவர்கள் உமாமகேஸ்வரனுடனும், வரதராஜப்பெருமாளுடனும் நடாத்தியுள்ளன ர். ஈரோசுக்கும் அழைப்பு விடப்பட்டதாயினும் அதனிடமிருந்து பதில் வரவில்லை. தென்னிலங்கையில் நடைபெற இருக்கும் மகாநாடுகளில் தமிழ் இயக்கத் தலைவ ர்களும் பேச இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு பழுகாமம் மகாவித்தியாலய அதிபர் உட்பட 6 ஊர்ப்பிரமுகர்க ள் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது. மருந்துகள் இல்லாததா ல் கிராமப்புற வைத்தியசாலைகள் இயங்கவில்லை.

கோண்டாவிலில் நடந்த பலாத்கரச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட 6 இந்தியப் படையினரும் பாதிக்கப்பட்ட பெண்களால் அடையாளம் காட்டப்பட்டனர். இந்த ஆறு பேரும் இராணுவத்திலிருந்து நீக்கப்படுவார்களென்றும், இவர்களுக்கான பென்சன் உரிமைகள் ரத்துச் செய்யப்படுமென்றும், நாட்டுக்கு இவர்கள் திருப்பி யனுப்பப்படுவார்களென்றும் இந்தியப்படை மேஜரினால் நீதவானுக்கு உறுதியளிக்க ப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19.12.87

இந்தியப்படையினருடனான சண்டையை நிறுத்தி கரிசனையுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கையில் தமிழ் மக்கள் அநுபவிக்கும் கொடுமைகட்கும், வேதனைகட்கும் முடிவுகட்டுமாறு விடுதலைப்புலிகளின் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்து அமெரிக்கா வாழ் தமிழர்கள் அவருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்கள். இதே போன்ற வேண்டுகோள்களை உள்ளடக்கிய இன்னொரு கடிதத்தை அவர்கள் ராஜீவ்காந்திக்கு அனுப்பியுள்ளார்கள். இரு கடிதங்களிலும் 200க்கு மேற்பட்ட தமிழர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் மூளைக்காய்ச்சலால் 15பேர் மரணமானார்கள்.

20.12.87

யாழ், முல்லைத்தீவு பகுதிகளிலிருந்து வந்துள்ள அகதிகள் புத்தளம், உடப்பில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பகுதிகளிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு உணவுப்பொருட்களைக் கொடுக்க வேண்டாமென அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

21.12.87

"வடக்கு, கிழக்கு இணைவதால் தவறு எதுவும் நேர்ந்துவிடப் போவதில்லை" — பொதுக்கூட்டமொன்றில் ஜே.ஆர்.

வவுனியாவில் டெலோ இயக்கத்துக்கு புளொட் இயக்கத்தால் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியின்றி தெரிவான தமிழ், முஸ்லீம் பிரதிநிதிகள் தமது பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டுமென புலிகள் மட்டக்களப்பில் கோரியுள்ளனர்.

2,330 யாழ் அகதிகள் கிளிநொச்சி மத்திய மாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

(தினபதிச் செய்திகள்)

15.12.87

டெலோ இயக்கத்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 2 இளம் பெண்கள் முல்லைத்தீவு, நெடுங்கேணியில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டு மின்கம்பத்தில் தொங்கவிடப்பட்டனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியா கந்தசாமி கோயிலின் பிரதான குருக்கள் டெலோ இயக்கத்தினரால் கடத்தப்பட்டு புலி இயக்கப் பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன. முல்லைத்தீவு குளம் முறிப்பில் அடையாளம் காணமுடியாதளவிற்கு பழுதடைந்த பெண்களின் பல சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் சுமார் 200 ஓலைக்குடிசைகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன.

இரண்டுக்கு மேற்பட்ட இந்தியப்படைப் பிரிவுகள் இலங்கையில் நிலை கொண்டிரு

www.tamilarangam.net

ப்பதாகவும், 162 விமானப்படையினரும், 114 கடற்படையினரும் இதில் அடங்குவர் எனவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். 20,000 முதல் 25,000 எல்லைப்புற முன்னணி இராணுவ வீரர்களை உள்ளடக்கிய 40,000 இந்தியத் துருப்புகள் இலங்கையில் இருப்பதாக மேற்குநாட்டு ராஜதந்திரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

17.12.87 (டெய்லி நியூஸ் செய்திகள்)
15.12.87ல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் வெள்ளவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்டார். நால்வருக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்தே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இருவர் ஓடிவிட்டனர். மற்றவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

டிசம்பர் 87 (சுவிஸ் சஞ்சிகையான செய்தியிலிருந்து)
யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த அ. ஜெறு என்பவரை சுவிஸ் அரசு நத்தார் தினமான 25.12.87ல் இலங்கைக்கு நாடு கடத்தியது. இதற்கு அதிருப்தி தெரிவித்து சுவிஸ் அகதி உதவி பொது ஸ்தாபனங்களும், தனிப்பட்டவர்களும் கறுப்பு உடையணிந்து கைகளில் மெழுகுதிரிகளுடன் பேர்ன் புகையிரத நிலையத்திலும், சூரிக் கோல்டன் விமானநிலையத்திலும் குழுமி நின்று துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தனர்.

ஐலண்ட் 09.12.87




www.tamilarangam.net

ஒக்ரோபர் 87 (சோசல் ஜஸ்ரிஸ்)

## கல்வியில் சமூக, பொருளாதார காரணிகள்

### படிப்பறிவும், வருமானமும்




### கல்வி மட்டமும், வருமான மட்டமும்

| வருமானக் குழுக்கள். (ருபாவில்) | பள்ளிக்கூடம் போகாதவர்கள். (வீதம்) | நடுத்தரப் படிப்பு (வீதம்) | ஓ.எல் (வீதம்) | ஏ.எல் (வீதம்) | பட்டம். |
|---|---|---|---|---|---|
| 0 -500 | 62.6 | 29.3 | 14.0 | 9.5 | 1.2 |
| 501-1000 | 27 | 34.3 | 30.8 | 38.1 | 19.4 |
| 1001-1500 | 5.7 | 16.0 | 21.2 | 17.3 | 25.3 |
| 1500-2000 | 2.3 | 8.3 | 13.3 | 9.5 | 18.8 |
| 2000க்கு மேல் | 2.0 | 11.9 | 20.9 | 24.8 | 35.0 |
| சராசரி மாத வருமானம் (ருபாவில்) | ↑ 572 | ↑ 1209 | ↑ 1709 | ↑ 2308 | ↑ 2189 |

### பாடசாலைக்குப் போகாமலிருப்பதற்கான சமூக, பொருளாதார காரணிகள்

5 - 13 வயதினர் (சதவீதத்தில்)

அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்ய முடியாதவர்கள் - 18.6

(தொடர்ச்சி 28ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழம் கேட்கிறார்கள் என்பதற்காக தமிழ்ப்பெண்களை அவஸ்தைப்படுத்தாதீர்!

மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடந்தது.

அந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே எதிர்க்கட்சி எம். பி. க்கள் தமிழ்ப்பெண்களுக்காக குரல் கொடுத்தனர்.

வடக்கிலும் கிழக்கிலும் இன்று லட்சக் கணக்கான பெண்கள் அகதிகளாக உள்ளார்கள். வடக்கில் தமிழ்ப் பெண்கள் பல நாட்களாக பட்டினி கிடந்து வேதனைப் பட்டார்கள். இந் நாட்டு தமிழ், முஸ்லிம், சிங்கள பெண்கள் அனுபவிக்கும் அவல நிலையைப் போக்க மகளிர் விவகார அமைச்சு செய்தது என்ன? மஹரகமை எம். பி. திரு. தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பினார்.

பயங்கரவாதத்தை அடக்கத்தான் வேண்டும். அதற்காக பெண்களை அவல நிலைக்காளாக்கக் கூடாது. தமிழ் ஈழம் கேட்கப்படுகின்றது. என்பதற்காக தமிழ் பெண்களை வதைப்படுத்தக் கூடாது. மனிதாபிமானத்தின் பேரால் அவர்களுக்கு உதவுங்கள். இராணுவம் நாளை போய்விடலாம். அகதிமுகாம், பெண்களின் பிரச்சினை நாளையும் இருக்கத்தான் போகிறது. எனவே இப்போதே தலையிட்டு நல்லதொரு திட்டம் வகுத்துச் செயல்படுங்கள் என்றும் திரு. தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார்.

## இலங்கை மீதே பழி வரும்

சர்வதேச மகா நாடுகளுக்கு இலங்கை மகளிர் விவகாரம் போவதற்கு முன் நடவடிக்கை எடுங்கள். இந்திய இராணுவம் செய்ததாக பேச்சு வராது இலங்கை அரசு மௌனமான இருந்து இடம் கொடுத்ததாகத்தான் பேச்சு வரும் என்று அவர் கூறினார்.

இலங்கை பாராளுமன்றத்திலும் பெண்கள் இருக்கிறார்கள். இந்திய பாராளுமன்றத்திலும் பெண்கள் இருக்கிறார்கள். இலங்கையில் இன்று பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை இவர்கள் அங்கீகரிக்கிறார்களா? என்றும் அவர் கேட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அகதிகளாக உள்ள பெண்கள், பிள்ளைகளின் விவகாரத்தில் புனர்வாழ்வு அமைச்சு மட்டும் நடவடிக்கை எடுக்க முடியாது. மகளிர் விவகார அமைச்சும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அமைச்சின் மகளிர் பணியகம் வடக்கு கிழக்கில் உள்ள பெண்களின் நிலை குறித்து கவனிக்க வேண்டும்.

## பெண் கூறிய அவலக்கதை

வடபகுதி தமிழ்ப்பெண்மணி ஒருவர் கூறிய அவலக் கதை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது. மகளிர் பணியக அதிகாரிகள் இத்தகைய பெண்களைச் சந்திக்க வேண்டும். அவலங்களைப் போக்க வேண்டும்.'

## முஸ்லிம் பெண்கள்

யாழ்ப்பாணத்தில் பெண்கள் நிர்வாணமாக்கப்படுகிறார்கள். கிழக்கில் முஸ்லிம் பெண்கள் நடத்தப்படும் விதம் வெட்கத்திற்குரியது. எமது நாட்டு பெண்களின் ஆடைகளைக் களைந்து சோதனையிட இந்திய இராணுவத்துக்கு உரிமையில்லை. இந்த செயல் ஏன் அனுமதிக்கப்படுகிறது. இது பற்றி தீக்ஷித்திடம் எடுத்துக்கூற வேண்டும்.

சர்வதேச மகாநாடுகளுக்கு இப் பிரச்சினைகள் வந்தால் படங்கள் மற்றும் ஆதாரங்களுடன் காட்டுவார்கள். அப்போது இந்தியப் படை செய்தது என்று வராது. இலங்கை அரசு பார்த்துக் கொண்டிருந்தது என்றுதான் கூறுவார்கள்.

## வீதியில் சடலங்கள்

யாழ்ப்பாணத்தில் சடலங்கள் பல நாட்களாக வீதியில் கிடந்துள்ளன. உயிரற்ற சடலங்களை மதிக்கக் கூடாதா? மிருகங்கள் சடலங்களை உண்ணுவதாகத் தெரிகிறது.

## சு. க. எம். பி. பேச்சு

அக்மீமன எம். பி. திரு. ரிச்சர்ட் பத்திரன பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிற்றூழியர்கள், தாதிமார், டாக்டர்கள் உட்பட 22 பேரை இந்தியப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர். அதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன? அதுதான் சமாதானப் படையினரின் சேவையா? இன்று யாழ். வைத்தியசாலையில் இந்திய டாக்டர்கள் இருக்கின்றனர். ஆயுதங்களுடன் இந்திய இராணுவத்தினர் வைத்தியசாலைக்குள் நடமாடுகின்றனர்.

இந்திய படையினர் பெண்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. இன்னும் சிறிது காலம் இந்திய இராணுவம் இங்கிருந்தால் எண்ணற்ற முறை

www.tamilarangam.net

பிறக்கப் போகின்றன. இப்பிள்ளைகள் பிரச்சினை எமது வைத்தியசாலைகளில் பெரிய பிரச்சினையாகஇருக்கப்போகிறது.

எமது நாட்டில் மராட்டிய இராணுவம் வந்து கொடுமைகள் புரிந்ததாகவும், கறுப்பு இராணுவத்தினர் இங்கு வந்திருப்பதாகவும் அறிகிறோம். சேர். ஜோன் கொத்தலாவலை காலத்தில் முன்னாள் உகண்டா தலைவர் இடிஅமினும் எமது படையில்ச்சேவை புரிந்ததாக கூறப்படுகிறது.

எனினும் அப்போதெல்லாம் எமது மக்கள் அனுபவிக்காத கொடுமைகளை இப்போது அனுபவிக்கின்றனர். இந்திய சமாதானப் படையினர் அந்தளவு கொடுமை புரிகின்றனர்.

## "இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் ஒரு நோக்கு!"

பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பீட விவாதக் கழகம் அண்மையில் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தமும் அதன் முக்கியத்துவமும் பற்றி ஒரு கருத்தரங்கினை நடத்தியது. இக்கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எல்.ஏ. காதர் அவர்கள் பேசுகையில் இச்சமாதான ஒப்பந்தம் சிலருக்கு வாழ்க்கைப் பிரச்சினையாகவும், சிலருக்கு இறைமையோடு சம்பந்தப்பட்டதாகவும், வேறு சிலருக்கு தங்களுஞ்சந்தோசமோடு சம்பந்தப்பட்டதாகவும், சிலருக்கு நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சம் 71.

என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறை இறுதி வருட மாணவன் திரு. ஆர். நித்தியானந்தனும் நீதிக்கும்சமாதானத்துக்குமான இயக்கத்தின் கண்டி மாவட்டச் செயலாளர் திரு. எஸ். பாலகிருஷ்ணனும் விசேட பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

முதலில் பேசிய திரு. நித்தியானந்தன் இலங்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கைகள் எவ்வாறு இவ்வுடன்படிக்கைக்குவழி அமைத்தது என்றும் (கம்யூனிச நாடுகளின் சமாதான நடவடிக்கைக்கு இவ்வுடன்படிக்கை எவ்வளவு தூரம் சமாதான வழியினூடாக கொண்டு வரப்பட்டது என்பதையும் குறிப்பிட்டு) தொடர்ந்து பேசுகையில், 1945 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் மிக அவதானமாக இந்தியா ஈடுபட்டு வந்துள்ளது அதனால் இக்காலகட்டத்தில் இந்தியாவின் ஒரு இணைந்த பகுதியாக இலங்கை இருக்க வேண்டும் இலங்கையின் இராணுவ ரீதியான புவியியல் நிலையம் வர்த்தக ரீதியான மையம் என்பன இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதாவது மேற்கு நாடுகளின் ஆதிக்கத்திற்கு உட்படுவதன் மூலம்; இந்திய தேசிய பிராந்திய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைகளுக்குவழி அமைந்து விடலாம் என்ற உணர்வின் தன்மை இவ்விடத்தில் அடையாளம் காட்டப்பட்டது.

1948ஆம் ஆண்டின் பின்

வெளிநாட்டுக் கொள்கையில் கொண்டிருந்த ஆரம்பகாலப் போக்கினை சற்று மாற்றிக்கொண்டபோதும் பிரித்தானியாவும் இலங்கையும் செய்துகொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை இலங்கையின் மீதான வெளிநாட்டுக் கொள்கையின் அவதானிப்பின் முதற்கட்டம் ஆகும். 1949 ஆம் ஆண்டின்பின் காணப்பட்ட பிரித்தானிய மேற்கு நாடுகளின் ஆதிக்கப்போக்கு என்பவற்றுக்கு இலங்கை உட்பட்டு இருந்தது.

1971ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரை காணப்பட்ட ஸ்ரீ-லங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி பலவழிகளில் இந்திய-இலங்கை உறவுகளை நெருக்கமடையச் செய்தன. இதற்கு அடிப்படைக் காரணம் இலங்கைக்கு கிடைத்த அணிசேரா நாடுகளின் தலைமைத்துவமும், இலங்கையின் கட்டுப்பாட்டு பொருளாதாரக் கொள்கையுமாகும்.

ஆனால் 1977ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்துடனும், இலங்கையில் வரலாற்று ரீதியாக வளர்ச்சிபெற்ற இனப்பிரச்சினையும் அதன் உக்கிரமான 1983 ஆம் ஆண்டு இனக் கலவரமும் இந்தியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த வழி அமைத்தது.

இலங்கையில் காணப்பட்ட இனப்பிரச்சினையின் உக்கிரநிலை, இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியாவின் தமிழ் நாட்டில் காணப்பட்ட எழுச்சி என்பவற்றை அவதானித்திருந்த இந்தியா. இலங்கையில் வேறுநாடு

www.tamilarangam.net

கள் இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் என்ற நோக்கத்துடன் இருந்த வேளையில்தான் இலங்கையின் வடமராட்சியில் 'லிபரேசன் ஒப்பரேசன்' நடைபெற்றது. என்றும் இதனையெல்லாம் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் தான் இந்தியா-இலங்கையின் பிரச்சினைகளில் நேரடியாக தலையிடத் தொடங்கி, சமாதான உடன்படிக்கை காணப்பட்டது எனத் தனது உரையை முடித்துக்கொண்டார்.

அடுத்ததாகப் பேசிய திரு. எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். இவ்வருடம் ஜூலை மாதம் 39ஆம் திகதி செய்யப்பட்ட இச் சமாதான ஒப்பந்தம் சமாதானத்தையும் சகஜத்தையும் ஏற்படுத்துவதற்கான காரணமாக அமைந்ததையும் குறிப்பிட்டார்.

இவ்வொப்பந்தத்தின் மூலம் நீண்ட காலமாக தமிழ் மக்களுடைய போராட்டமாக இருந்து வந்த இனப்பிரச்சினை ஒரு முடிவுக்குக்கொண்டு கொண்டு வரப்பட்டது. இலங்கை அரசாங்கத்துக்கு சிங்கள மக்களிலும் பார்க்க மிகப் பிரச்சினையாக இருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (L.T.T.E.) நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வர சந்தர்ப்பத்தை வழங்கியது. இந்தியாவுக்கு தேசிய ரீதியாக இவ்வுடன்படிக்கையில் உத்தரவாதம் அளிக்கும் சந்தர்ப்பத்தையும் வழங்கியது.

தமிழ் மக்களால் இது வரைகாலமாக இலங்கை அரசாங்கத்திடம் கேட்கப்பட்டு வந்த மொழிச் சமத்துவம்: பிரதேச பாதுகாப்பு: குடியேற்றப் பிரச்சினை நிலப்பிரச்சினை என்பன சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரக் கூடியதாகவும், சிங்கள மொழிக்குச் சமமாக தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டதன் காரணமாக இலங்கை ஒரு பன்மைச் சமுதாய அமைப்பு என்பதைநிருபிக்கக் கூடியதாகவும் அமைந்தது.

தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாத்துக் கொள்ள வழி அமைத்ததுடன் பாராளுமன்ற சட்டத்தில் இருந்து வந்த 13 ஆவது சரத்து நீக்கப்படவும், அதன் மூலம் மாகாணசபை சட்டமூலத்தின் மூலம் தமிழ் மக்களின் சகலஅபிலாஷைகளையும் தீர்த்துக் கொள்ள அதிகாரப் பங்கீடு செய்யப்படவும் இவ் ஒப்பந்தம் வழி வகுத்தது.

தமிழ் மக்கலின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணும் முகமாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களின் நிலைப்பாடு சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கையில் பிரச்சினைக்குட்பட்டிருந்த இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களையும், இலங்கை அரசாங்கத்தையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் ஈடுபடுத்தாமல் இலங்கை அரசாங்கமும் தமிழ் மக்களின் சார்பில் இந்திய அரசாங்கமும் கைசாத்திட்டது பெருங்குறைபாடு ஆகும்.

இந்திய அரசாங்கம் இவ்வொப்பந்தம் சம்பந்தமாக உறுதி மொழி வழங்குகையில் தமிழ் மக்களுக்கு வாய் மொழி மூலமும்: இலங்கை அரசாங்கத்துக்கு எழுத்து மூலமும் கொடுத்ததுடன்: இவ்வொப்பந்தம் நீண்டகாலத்திற்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இன்றைய இவ்வுடன்படிக்கையின் வடக்கு-கிழக்கு நிலைமைபற்றிப் பேசிய அவர் இவ்வொப்பந்தத்திற்கு அமைய சகல ஆயுதங்களையும் கையளிக்காத விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது இனத்தின் எதிர்காலம் சம்பந்தமாக மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு திருப்பப்பட்டதுடன் இந்திய இராணுவத்தினரும் தமது ஆயுதங்களை இலங்கையின் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக திருப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது.

இவ்வாறு செய்யப்பட்ட இவ்வொப்பந்தமானது இன்று நடைமுறைச் சிக்கலானதாக இருப்பதற்கான காரணத்தையும், இலங்கையின் தென் பகுதிகளில் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வரும் தடை செய்யப்பட்ட மக்கள் விடுதலை இயக்கத்தினர் (ஜே. வி. பி.) தமக்குச் சாதகமாக இவ்வொப்பந்தத்தை பயன்படுத்துவதையும் கூறினார். ஏனெனில் இது வரை காலமும் இலங்கையின் அரசியலில் செல்வாக்குப் பெற்று வந்தஅரசாங்கங்கள் அனைத்தும் இலங்கையின் இனப்பிரச்சினையை மையமாக வைத்து வந்துள்ளது. தற்போது

www.tamilarangam.net

மூலம் தமிழ் மொழிக்கு சிங்கள மொழிக்குச் சமமான அந்தஸ்து வழங்கப்பட்டதன் காரணமாக சிங்கள மொழி இது வரை காலம் பெற்று வந்த முதன்மை தானம் நீக்கப்பட்டு விட்டது என்பதை இவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதால் இவ்வாதம் தலைதூக்கி இருக்கின்றது.

அதேவேளையில் வடக்கு கிழக்குப் பகுதியில் சமாதானம் நிலைக்க வேண்டுமானால் தமிழ்ப் போராளிகளின் ஆயுதப்போராட்டம் நிறுத்தப்படுவதுடன்; இலங்கையில் நிலைகொண்டிருக்கும் இந்தியப்படையினர் வாபஸ்பெறப்பட வேண்டும்.

---

ஜே.ஆர். வி. அமிர்தின்
பேராதனைப்
பல்கலைக்கழகம்.

# யாழ்நகர்ப்புறக் கண்ணோட்டம்

(பி. மாணிக்கவாசகர்)

யாழ்ப்பாணம்,

இந்திய அமைதிப் படையினர், இந்திய பொலிசார் ஆகியோரின் பலத்த பந்தோபஸ்து பாதுகாப்புக்கு மத்தியில், இந்தியா... தமிழ் பேசும் சிவில் நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்புச் சேவையுடன் யாழ்ப்பாணக் கச்சேரி இயங்கி வருகின்றது.

யாழ். அரசாங்க அதிபருக்கும் மற்றும் செயலக உயரதிகாரிகளுக்கும் அமைதிப் படையைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரி ஒருவரும் நிர்வாகக் கடமையில் இங்கு துணைபுரிந்து வருகின்றார்.

லொறிகள், பஸ் வண்டி சாரதிகள் பயணிகளுக்கான பிரயாணத்திற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காகவும், ஒப்பந்தக்காரர்கள் தமக்குரிய பென்சன் வவுச்சர்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் காலை 8 மணிக்கு ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டவுடனேயே கச்சேரியில் குழுமிவிடுகின்றார்கள்.

படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்களின் விடுதலை தொடர்பான அலுவல்களுக்கும் உயரதிகாரிகளைச் சந்திப்பதற்காகப் பொது மக்கள் கச்சேரிக்குப் படையெடுக்கின்றார்கள். இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரண பணிகள், உணவு விநியோகக் கடமைகளும் கச்சேரியில் மேற் கொள்ளப்படுகின்றன.

அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தமட்டில் 25 வீதமானவர்களே கடமைக்குச்சமுகமளிக்கின்றார்கள் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்நகரில் இயங்கி வருகின்ற ஐந்து வங்கிகளிலும் கூட ஊழியர்களின் வரவு ஏறக்குறைய 25 தொடக்கம் 40 வீதமாகவே இருக்கின்றதென்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழியர் வராமைக்கு
காரணம்

---

யாழ். மாநகர எல்லைகளிலும், அவற்றைச் சார்ந்த பகுதிகளிலும் நிலவுகின்ற நிரந்தரமற்ற நிலைமைகள், மோதல்கள், திடீரென பிறப்பிக்கப்படும் ஊரடங்கு, ஆங்கிங்கு மக்கள் எவரும் இருந்த இடங்களைவிட்டு அசைய க் கூடாதென்று படையினரால் எந்தவேளையிலும் பிறப்பிக்கப்படும் கண்டிப்பான உத்தரவுகள், பொது வாகனப் போக்குவரத்துகள் இல்லாமை போன்ற காரணங்களினால் அரசாங்க ஊழியர்களும் ஏனையோரும் தமது கடமைகளுக்குச் சமுகமளிக்கமுடியாமல் உள்ளதென்று யாழ்ப்பாணத்தின் நிர்வாக நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்த வட்டாரங்கள் தெரிவித்தன.

---

புலிகள்
எச்சரிக்கை

---

இதேவேளையில், யாழ்ப்பாணத்தில் இப்போது நடைபெறும் சிவில் நிர்வாகத்திற்கு எந்த வகையிலும் ஒத்துழைக்கக் கூடாதென்று அரசாங்க, வங்கி அதிகாரிகள், நிர்வாக ஊழியர்களுக்கு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரும்புமிடங்களில் எல்லாம் இந்தியப் படை வீரர்களின் நிலைகளும், நடமாட்டங்களும் காணப்படுகின்றன. யாழ். நகர்ப் பகுதி வழமைக்கு வேகமாகத் திரும்பிக் கொண்டிருப்பது போலவும், அமைதி நிலவுகின்றது போலவும் மேலோட்டமாகத் தெரிகின்ற போதிலும் அமைதியான பதற்றநிலை ஒன்று சகல இடங்களிலும் இழையோடியுள்ளதைக் காண முடிந்தது.

---

வங்கிகள்,

---

ஒரே ஒரு இலங்கை வங்கிக் கிளை ஆஸ்பத்திரி வீதியிலும், ஸ்ரான்லி வீதி, மெயின் வீதி ஆகிய இடங்களில் மக்கள் வங்கியின் இரண்டு கிளைகளும், கொமர்ஷல் வங்கியும் இயங்கி வருகின்றன. ஸ்ரான்லி வீதியில் ரயில்வே கடவைக்கு அருகில் உள்ள தனியார் கட்டிடம் ஒன்றில் அட்டன் நெஷனல் வங்கி கடந்த திங்கட்கிழமை முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

பென்ஷன்கள். அரசாங்க

www.tamilarangam.net

...வியாபாரிகள் தனியாரின் வங்கிக் கணக்குகளுக்கான காசோலைக் கொடுப்பனவுகள் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பண வைப்புகளும், பண மீளளிப்புகளும் எதுவித கட்டுப்பாடுமின்றி நடைபெறுகின்றன. அட்டன் நெஷனல் வங்கி காலை 9 மணி முதல் நாளாந்தம் ஒரு மணித்தியாலமும் ஏனைய வங்கிகள் 3 மணித்தியாலங்களும் செயற்படுகின்றன. இந்தியப் படையினர் பாதுகாப்பளித்து வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை, கிரனைட் வீச்சு சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்து கடந்த வாரம் முழுதும் செயற்படாதிருந்த யாழ்ப்பாண தபால் அலுவலகம் திங்கட்கிழமை முதல் செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தபால் சேவைகள் இயங்கத் தொடங்காமையினால், பிற வங்கிகளின் காசோலைகளும், வெளி மாவட்டங்கள் கொழும்பு போன்ற இடங்களின் காசோலைகளும் வங்கிகளில் ஏற்றுக்கொள்ளும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

வெளிநாட்டு ட்ராப்டுகளையே பெருமளவில் நம்பியுள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையும் வங்கி வட்டாரங்களில் நிலவுவதாகவும் அதிகாரிகள் கவலை தெரிவித்தார்கள். தபால், தொலைபேசி சேவைகள் சீரடையும் வரை இது சாத்தியமாகாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி

யாழ். ஆஸ்பத்திரிக்குரிய மருந்துகளையும், ஒக்சிஜன் சிலிண்டர்களையும் தடங்கலின்றி கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்வதில் பல தடைகளையும், தாமதங்கள் சிரமங்களையும் நிர்வாக அதிகாரிகள் எதிர்நோக்கி வருகின்றனர். எனினும் வைத்திய சேவைகள் தடங்கலின்றி நடைபெற்று வருகின்றன.

இந்திய தாதிகள் வருகை

ஆஸ்பத்திரியின் வைத்திய ...ங்களைவற்றை மேலும் விஸ்தரிப்பதற்காகவும், சீர்ப்படுத்துவதற்காகவும், டாக்டர் ஒருவரின் தலைமையில் பத்து தாதிமார்களும், 12 மருத்துவ தாதிகளும் திங்களன்று இந்தியாவில் இருந்து வந்து சேர்ந்துள்ளார்கள். மேலும் சில வைத்தியத்துறை ஊழியர்கள் அடுத்த சில தினங்களில் வந்து சேரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மின் விநியோகம்

தற்போது யாழ். ஆஸ்பத்திரிக்கு 24 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டு வரும் மின் விநியோகம் காலையில் 4 மணித்தியாலங்களுக்கும், பிற்பகல் 4 மணித்தியாலங்களுக்குமாக 8 மணித்தியாலங்களாக குறைக்கப்படவுள்ளது. எனினும் போதியளவு ஜெனரேட்டர்கள் இருக்கின்றபடியால் வைத்திய சேவைக்குத் தேவையான மின்சாரத்தை எதுவித பாதிப்பும் இன்றி பெற்றுக் கொள்ள முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பத்திரிகை காரியாலயங்கட்கு

இதேவேளையில் வங்கிகள், செய்திப் பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் முக்கியமான அரச திணைக்கள அலுவலகங்கள் என்பனவற்றிற்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக குறிப்பிட்ட சில பகுதிகளில் மின் கம்பி இணைப்புத் திருத்த வேலைகளை வேகப்படுத்துமாறு படை அதிகாரிகள் மின்சார பகுதியினரைத் தூண்டி வருகின்றார்கள்.

யாழ்ப்பாண செய்திப் பத்திரிகைகளில்; ஒரு பத்திரிகையாவது அடுத்த பத்து தினங்களில் வெளிவரத் தொடங்கும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இருபாலை, கோப்பாய், இராசவீதி பகுதிகளில் இந்தியப் படையினர் சுற்றிவளைத்து கடந்த செவ்வாயன்று அதிகாலை ஆரம்பித்த தேடுதலின் போது ஏற்பட்ட மோதல்களில் 3 படையினருக்கு ...கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மாலை வரை மோதல்கள் தொடர்ந்து இடம் பெற்றன. ஷெல் தாக்குதல்களும் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் சத்தங்களும் கேட்டதுடன், இப்பகுதி மக்கள் பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்கு ஓடிச் சென்றார்கள்.

கல்வியங்காட்டில் டெலோ

கல்வியங்காடு பகுதியில் டெலோ இயக்கம் தனது தலைமை அலுவலகத்தைத் திறந்து செயற்படத் தொடங்கியுள்ளது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகளால் டெலோ இயக்கம் தடை செய்யப்பட்டதுடன் அதன் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் உட்பட பல அங்கத்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க, இரண்டு இளம் பெண்கள், ஓர் இளைஞர் உட்பட நால்வர் கடத்தப்பட்டு, பின்னர் இந்தியப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஊரடங்கு சட்டம்

யாழ்நகரில் முதலாம் திகதி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் காலை 8 மணி முதல், மாலை 5 மணிவரை தளர்த்தப்பட்டுள்ள போதிலும், திங்கள், செவ்வாய் தினங்களில் மாவிட்டபுரம், உடுவில், சுன்னாகம் போன்ற பகுதிகளில் மக்களின் நடமாட்டம் படையினரால் தடை செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரண பணிகள்

யாழ் நகர்ப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ள படையினர் அங்கிருந்து வடக்காக பண்டத்தரிப்புக்கு இடைப்பட்ட பிரதேசங்களையும், ஏற்கனவே தமது கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ள காங்கேசன்துறை, பலாலி, பருத்தித்துறை பிரதான வீதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசங்களையும் தம்வசம் கைப்பற்றுவதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்கள்.

**சர்வோதயம் உதவி**

இத்தகைய நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டு அகதிகளாக இருப்பவர்களுக்கும், தொழில்களை இழந்தும், இருக்கின்ற தொழில்களைத் தொடர்ந்து செய்ய முடியாமல் கஷ்டப்படுபவர்களுக்கும் அவ்வப்பகுதிகளுக்குச் சென்று தொகுதி தொகுதியாகவும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் உள்ள வட பகுதி சர்வோதய தலைமை அலுவலகத்தில் வைத்தும் யாழ். சர்வோதயத்தினரால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளையில் இந்திய செஞ்சிலுவைச் சங்கமும், தரைமுகாம்களிலும், இராணுவ முகாம்களிலும் இந்தியப் படையினரும் மக்களுக்கு நிவாரண உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சந்திக்கு சந்தி கரும்பலகைகள் வைத்து, நிவாரண உதவிகள் வழங்கும் இடம், நேரம், ஊரடங்கு நேரம் என்பனவற்றை இந்தியப் படையினர் அறிவித்து வருகின்றனர். திடீரென ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டால், அதனை சத்தவெடி மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றனர்.

**நல்லூரில் ஆறுவேளை பூஜை**

நல்லூர் கந்தசாமி கோவிலில் ஆறு வேளை நித்திய பூஜைகளும் ஏனைய சமய வழிபாட்டு நிகழ்ச்சிகளும் எதுவித தடங்கலுமின்றி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பூஜைகள், அபிஷேகங்களில் பொது மக்களுடன் இந்தியப் படை அதிகாரிகள் வீரர்களும் வந்து கொள்கின்றார்கள்.

இராணுவ நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தில் அகோரமா நடைபெற்ற தினங்களில் பல்ல பிரக்கணக்கான பொது மக்க வெளியில் எங்கும் அசைய மு பாதபடி அகதிகளாகத் தஞ் மடைந்திருந்த வேளைகளிலும் நித்திய பூஜைகள் எதுவித இட பாடும் இன்றி நடைபெற்று வ ததாக கோவிலின் தலைமை குருக்கள் க. சண்முகநாத குரு கள் கேசரிக்குத் தெரிவித்தார்.

அகதிகள் அனைவரும் வெளி யேறி முடிந்ததும் உரிய முறை யில் கோவில் சுத்தம் செய்ய பட்டு, வாஸ்து சாந்தி, பிராய சித்த அபிஷேகம் என்பன போன்ற சமய கிரியைகள் செ யப்பட்டு, வழமையான பூஜை கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். நித்திய உற்சவம் உள் வீதியில் நடைபெறுகின்றது.

---

(22ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப நடவடிக்கைகள் – 5.4
உடல்நலக்குறைவு – 4.4
ஆர்வமின்மை – 14.7
பாடசாலைக்கு போக முடியாமை – 6.2
வேறு காரணங்கள் 47.3

## பிந்திய செய்திகள்

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்புவது பெப்ரவரி மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் நாட்டுக் கப்பல் ஒன்றிலேயே இவர்கள் அனுப்பப்படுவார்கள்.

25.12.87ல் மட்டக்களப்பில் பொலிஸ்காரர் ஒருவர் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து பொலிசார் கடைகளில் நின்ற பொதுமக்களை நோக்கிச் சுட்டதில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

31.12.87ல் கண்டியில் பொதுமக்கள் குழுமியிருந்த வைபவ நேரமொன்றில் குண்டு வெடித்ததில் நால்வர் கொல்லப்பட்டனர். 60பேர் காயமடைந்தனர்.

காத்தான்குடியில் 33 முஸ்லீம்களும், 8 தமிழர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

நிஜங்கள் (3 டி.எம்.)

ஜனனம் (3 டி.எம்.)

வித்தியாசப்படும் வித்தியாசங்கள் (3 டி.எம்.)

பாதி உறவு (5 டி.எம்.)

மேற்படி புத்தகங்களை தென்றுசிய நிறுவனத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்களுக்குரிய பணத்தை வங்கி மூலம் அனுப்பலாம்.

புத்தகங்களின் விலைக்கு சமமான தபால் முத்திரைகளை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். (இச்சலுகை மேற்கு ஜேர்மனியில் இருப்பவர்களுக்கு மட்டும்.)

www.tamilarangam.net

# புகை பிடிப்பதை நிறுத்துவது எப்படி?

உலகிலேயே நோய்கள் வராமல் தடுப்பதற்கு எத்தனையோ மருந்துகளும், வழிமுறைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை அத்துனையை யும் கடைப்பிடிப்பதற்கு பதில் புகை பிடிப்பதை நிறுத்தினால் போதும், அதிக நோய்களைத் தடுத்து விடலாம். அதிகம் மனிதர்கள் உடல் நலத்தை மேம்படுத்தலாம்.

ஆகவே உறுதியாக, நிச்சயமாக புகை பிடிப் பதை நிறுத்த வேண்டும். மார்க்ட்வெயின் அவர்கள் நகைச்சுவையோடு கூறினார்கள், "புகை பிடிப்பதை நிறுத்துவது மிக எளிது. நானும் கூட பலமுறை அதனை நிறுத்தியிருக்கிறேன்."

அடுத்த சிகரெட்டைத் தொடுவதற்கு முன் உள்ள நிறுத்தம் (Gap) ஒரு நிறுத்தமல்ல. புகை பிடிப்பதை முற்றிலுமாக நிறுத்த வேண்டும்.

சார்லஸ் டிகால் அவர்கள் கூறியது போல புகை பிடித்தலை நிறுத்த வேண்டும். அவரை எவ்வாறு நீங்கள் புகை பிடித்தலை நிறுத்தினீர்கள் என்று கேட்டதற்கு "புகை பிடிப்பதை நிறுத்துவது மிக எளிது. நான் எல்லோரிடமும் புகை பிடிப்பதை நிறுத்தி விட்டதாகக் கூறி விட்டேன். ஆகவே வேறு வழியில்லை. உண்மையாகவே நிறுத்தி விட்டேன்."

புகை பிடிப்போரில் பலர் இருமல் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் போது புகை பிடிப்பதை நிறுத்த எண்ணுகிறார்கள். அதன் தொல்லை அதிகரிக்கும் போது நிறுத்தி விடுகிறார்கள். மேலும் சிலர் புகை பிடிப்பதால் ஏதாவது ஒரு நோயின் துவக்க கட்டத்தை அடையும் பொழுது அப்பழக்கத்தை நிறுத்த எண்ணமிடுகிறார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் சிலர் களைப்பாலும், தளர்ச்சியாலும் பாதிக்கப்படும் பொழுது அப்பழக்கத்தை விட நினைக்கிறார்கள். பெரும்பாலோர் அதன் பாதிப்புக்களை நினைத்து அஞ்சி தனது குடும்பத்தினரின் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டும் புகை பிடிப்பதை நிறுத்தி விடுகிறார்கள்.

புகை பிடிப்பதை நிறுத்துவதற்கு எளிதான உத்தரவாதமான முறை ஏதுமில்லை. வலுவான மனத்தோடு உறுதியான செயல்களோடுதான் அதனைச் சாதிக்க முடியும். எவ்வளவுக்கெவ்வளவு அதிக நாட்கள் ஒருவர் புகை பிடித்திருக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அதிக நிகோடின் அவரது ரத்தத்திலே சேர்ந்திருக்கும். புகை பிடிப்பதின் பால் ஈடுபாடும் அந்த அளவு அவரிடம் இருக்கும். உடனடியாக உடலுக்கு நிகோடின் செல்வதைத் தடுக்கும்போது எதிர்விளைவுகளும் நேரிடும். முதல் சில நாட்கள் தாங்க முடிந்தால் தொடர்ந்து வெற்றி காண முடியும்.

புகை பிடிப்போரை வகைப்படுத்தி ஒவ்வொரு வகையினருக்கும் அறிவுரைகளும் மருத்துவர்கள் கொடுத்துள்ளனர்:

### பிரச்சினைக்காக புகைப் பிடிப்போர்

மனக் கவலையோ தொல்லைகளோ நேரிடும் போது மட்டும் அவற்றை மறப்பதற்கோ கவலையைத் தவிர்க்கும் பொருட்டோ புகை பிடிப்போர் சிலர் உண்டு. அவர்கள் புகை பிடிப்பதை நிறுத்த பிரச்சினைகள் குறைந்த நாளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். விடுமுறை தினங்களுக்கு முந்தைய மாலை சரியான நேரமாகும். ஏனென்றால் அலுவலக பிரச்சினைகள் மறுதினங்களிலே இல்லாமையால் புகைப் பிடித்தலை அவர்கள் அப்போது எளிதில் நிறுத்த முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வகையினர் ஏதாவது ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற பழக்கம் கொண்டவர்கள். சிகரெட்டுகளுக்கு பதில் எழுது கோல் போன்ற பொருள்களைக் கையாண்டு கொண்டே இவர்கள் புகைப்பழக்கத்தை நிறுத்தி விடக்கூடும்.

## பழக்கமான புகை பிடிப்போர்

புகை பிடித்தலையே ஒரு தொடர் பழக்கமாக மேற்கொண்டவர்கள் இவர்கள். புகை பிடிப்பது தெரியாமலேயே ஒன்றன் பின் ஒன்றாக புகைத்துக் கொண்டிருப்பார்கள் இவர்கள். இவர்கள் இப் பழக்கத்தைக் கைவிடுவது கடினம். ஆனால் இவர் கள் புகை பிடிப்பதை நிறுத்தக் கூடுமானால் மற்றைய வகையினரைவிட அதனைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள். ஏனென்றால் புகை பிடிக்கா மையையே ஒரு பழக்கமாக மேற்கொண்டு விடுவார்கள்.

## இளைப்பாறப் புகை பிடிப்போர்

இவர்கள் உணவு உண்டவுடனோ, ஒரு கோப்பை காப்பியோ தேநீரோ அருந்தியவுடன் அல்லது மது அருந்தியவுடன் புகை பிடிக்கும் பழக்கம் உடையவர்கள். அவர்கள் அப்படிப்பட்ட வாய்ப்புக்களைத் தவிர்ப்பது நல்லது. உணவு உண்ணாமல் இருக்க முடியாது. உண்டவுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து வேறு படித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட வேண்டும். காப்பி, தேநீர், மது அருந்துவதைக் குறைக்கவேண்டும் அல்லது நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் அவற்றைத் தொடரும் புகை பிடிக்கும் பழக்கமும் நின்றுவிடும் அல்லவா?

www.tamilarangam.net

## விரும்பி வேண்டி புகை பிடிப்போர்

இவர்கள் புகை பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். இவர்கள் அப்பழக்கத்தை நிறுத்துவதுதான் சற்றுக் கடினம். ஏனென்றால் ஒரு சிகரெட்டைக் குடித்து முடித்தவுடனேயே அடுத்ததை அவர்கள் உள்ளம் நாடுகிறது. இவர்கள் நல்ல மன உறுதியோடு செயல்பட்டால் புகை பிடிப்பதை நிறுத்த முடியும்.

## உற்சாகத்திற்காகப் புகை பிடிப்போர்

இவர்கள் புகை பிடிப்பது தமக்கு உற்சாகத்தை அளிக்கிறது என்று நம்பி புகை பிடிக்கிறார்கள். அவ்வாறில்லை என்று நம்பி மன உறுதியோடு இந்தப் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். இவர்கள் அதனை விட்டு விட்டு வேறு காபி, தேநீர் பழக்கத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளக் கூடாது.

புகை பிடிப்பதை நிறுத்தியவர் யாராக இருந்தாலும் சரி, மீண்டும் மீண்டும் புகை பிடிப்பதற்கு தூண்டப்படுவார்கள். ஒரு முறை மட்டும் பிடித்து விட்டு நிறுத்தினாலென்ன என்று தோன்றும். எந்த வகைத் தூண்டலுக்கும் இடம் கொடுக்கலாகாது. அவ்வாறு இடம் கொடுக்காமல் புகை பிடித்தலை வெற்றிகரமாக நிறுத்த கீழ்க்காணும் யோசனைகள் பலனளிக்கும்:

1. மற்றைய புகை பிடிப்போருடன் சிறிது காலம் பழகாதீர்கள். ஏனென்றால் அவர்கள் புகை பிடிப்பதைக் கண்டால் உங்களுக்கும் புகை பிடிக்கும் ஆர்வம் எழக்கூடும். ஆகவே ஏனைய புகை பிடிப்போரை விட்டு உங்கள் எண்ணம் ஈடேறும் வரை எட்டியிருப்பதே மேல்.

2. புகை பிடிப்பது தவறு என்று உண்மையாகவே உணருங்கள். அதன் தீமைகள் பற்றியும் அதனால் அவதிக்குள்ளானோர் பற்றியும் மீண்டும் நன்கு படியுங்கள். புகை பிடிப்பதின் தவறு பற்றி

[illegible] செய்யுங்கள். உங்கள்
www.tamilarangam.net
நண்பர்கள் சிலரையும் இம்முயற்சியில் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் பேசி ஊக்கமளித்துக் கொள்ளுங்கள்.

3. கையிலோ, வீட்டிலோ, அலுவலகத்திலோ சிகரெட் ஏதும் வைத்துக் கொள்ளாதீர்கள். புகை பிடிப்பதை நிறுத்துவது என்று முடிவு செய்த பிறகு உங்கள் வசமுள்ள எல்லா சிகரெட்டுகளையும் கடையிலோ, வேறு புகைபிடிப்போருக்கோ கொடுத்து விடுங்கள். கையிருப்பிலே சிகரெட்டுகள் இருந்தால் மீண்டும் பிடிக்கத் தோன்றும்.

4. உங்களுடைய குடும்பத்தாரிடமும், நண்பர்களிடமும் நீங்கள் புகை பிடிக்கும் பழக்கத்தை விட்டு விட்டதாகக் கூறுங்கள். உங்கள் வாக்கைக் காப்பாற்றுவதற்காகவாவது அப்பழக்கத்தை நிறுத்த முற்படுவீர்கள்.

5. உங்களுடைய உணவுப் பழக்கத்தை ஒழுங்கு செய்து கொள்ளுங்கள், அதிகமாக பழங்களையும், காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். புகையிலை ஏக்கத்தை எதிர்க்க இவை உதவும். முக்கியமாக அவற்றை மட்டுமே சில நாட்கள் உண்டு வந்தால் புகை பிடிக்கும் எண்ணமே உங்களிடம் எழாது.

6. பட்டினியாக இருக்க முயல வேண்டாம். புகைப் பழக்கத்தை ஒழிக்க முற்படும் பொழுது எடை குறைக்கவும் முயற்சி செய்ய வேண்டும். எடை கூடினாலும் பரவாயில்லை. பின்னர் குறைத்துக் கொள்ளலாம்.

7. உடற்பயிற்சியை மேற்கொள்ளுங்கள். நன்றாகத் திறந்த வெளியில் நன்கு மூச்சை உள்ளே இழுத்து விடும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். தினசரி நடப்பதையும் பயிற்சியாக மேற்கொள்ளுங்கள். நுரையீரலில் சுத்தமான காற்று செல்வதால் உடல் நலம் அடைவது தெரியும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8. தினசரி இருமுறை குளியுங்கள். நல்ல குளிர்ந்த நீரில் குளிப்பது உடல் ஆரோக்கியத்தைப் பேணி மகிழ்வோடு விளங்கச் செய்யும். புகை பிடித்தலைத் தடுக்க தேவையான உறுதியைக் கொடுக்கும்.

9. காரமான உணவுப் பொருட்களையும், மசாலா பொருட்களையும் உண்ணுவதைத் தவிருங்கள். மது, காபி, தேநீர் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. மிளகு, கடுகு, பிற மசாலாப் பொருட்களையும் உணவிலிருந்து தவிர்க்க வேண்டும். இவையெல்லாம் புகை பிடிக்கத் தூண்டக் கூடும். தண்ணீர் அதிகம் அருந்த வேண்டும். புகை பிடிக்க ஆர்வம் எழும்பொழுதெல்லாம் குளிர்ந்த நீரை அருந்தவேண்டும்.

10. புகை பிடிப்பதை நிறுத்த தேவையான மனஉறுதியோடு நடந்து கொள்ளுங்கள். எப்பொழுதும் தளரக் கூடாது என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்.

11. நீங்கள் எந்தெந்த சந்தர்ப்பங்களிலே புகைபிடித்து வந்திருக்கிறீர்கள் என்று பட்டியலிட்டு எழுதிக் கொள்ளுங்கள். அந்த சந்தர்ப்பங்களைத் தவிருங்கள். எடுத்துக்காட்டாக காபி குடிக்கும் நேரத்தில் அதற்கு பதில் குளிர் பானமோ குளிர் நீரோ அருந்துங்கள்.

12. இறைவனிடம் வேண்டுங்கள். உங்கள் உறுதியில் நீங்கள் பிறழாதிருக்க இறைவன் துணையை நாடுங்கள். இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்யுங்கள்.

இப்படிப்பட்ட யோசனைகளனைத்தையும் பயன்படுத்தி எப்பாடு பட்டாகிலும் புகை பழக்கத்தை நிறுத்தி விடுங்கள். அந்த அளவிற்கு அது பயனளிக்கும்.

நீங்கள் நோய்களால் பீடிக்கப்படும் வாய்ப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடல் நலத்திற்கும், உங்கள் குடும்பத்தின் நலச் செழிப்பிற்கும் அது பெரிதும் உதவுகிறது.

□ □

> எனவே, புகை பிடிக்கும் நண்பர்களே! உங்களது பிள்ளைகளின் அறிவு, ஆரோக்கிய வளர்ச்சிக்காகவும் அவர்களது எதிர்கால வளமான வாழ்க்கைக்காகவும், இன்றே புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துங்கள்.



போதைப் பழக்கங்களை நிறுத்துவது எப்படி?

எஸ். சுந்தரசீநிவாசன், B.E., D.L.L., M.I.E.

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, சோமசுந்தரம் தெரு, தி. நகர்,
சென்னை-600 017

www.tamilarangam.net

# டக்கிலே.... 




1987ம் ஆண்டு நவம்பர் மாதப் பிற்பகுதியில் வடபகுதிக்குச் சென்று வந்திருக்கும் அருட் தந்தை தேவராஜா அவர்களை சந்தித்து உரையாடினோம். உரையாடலின் சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

— ஆசிரியர் குழு.

ஆ.கு – கொழும்பிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் போக முடிந்ததா?

தேவ – இல்லை. கொழும்பிலிருந்து வவுனியாவரை சுலபமாக வர முடிந்தது. வவுனியாவில் எங்களை தடுத்து அனுமதி தர மறுத்து விட்டார்கள். அதன்பின் கிராமசேவகர் மூலமாக விண்ணப்பித்து இந்திய இராணுவ முகாமில் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டேன். அனுமதிப்பத்திரம் இல்லாமல் யாரும் போக முடியாது.

ஆ.கு – வவுனியாவிலிருந்து வரும்போது பல இடங்களில் சோதனை செய்யப்படுகிறதா?

தேவ – வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை 20க்கு மேற்பட்ட சோதனை தடைமுகாம்கள் இருந்தன. பெரும்பாலானவற்றில் இந்திய இராணுவத்தினரே இருக்கின்றனர். இலங்கை இராணுவமோ, இலங்கைப் பொலிசாரோ எந்தவிதமான கடுமையான சோதனையும் செய்வதில்லை. இந்திய இராணுவத்தின் சோதனை முறைகள் மிக கடுமையாக இருந்தன. எல்லோருடைய பொதிகளும் பூரணமாக சோதிக்கப்பட்டன. பெண்கள் கூட அநாகரிகமான முறையில் சோதனைக்குள்ளாக்கப்பட்டார்கள். தடைமுகாம்களில் இருப்பவர்களுக்கு தமிழும் தெரியாது. ஆங்கிலமும் தெரியாது. இதனால் மக்கள் பல சிரமங்களை சந்திக்கிறார்கள். இராணுவ முகாம்களுக்கருகில் திறீஸ்ரார், புளொட் ரெலோ முகாம்கள் அமைந்துள்ளன. அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் பகிரங்கமாக உலவுகிறார்கள்.

ஆ.கு – பயணம் செய்யும்போது வேறு எவற்றை அவதானிக்கக்கூடியதாக இருந்தது?

தேவ – அரியாலையிலிருந்து யாழ் போகும்வரையில் பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாக இருந்தன. கட்டடங்கள் இல்லாமல் வெளியாக இருந்தது.

ஆ.கு – யாழ்ப்பாணத்தில் நீங்கள் கண்டவை என்ன?

தேவ – யாழ்நகரப் பகுதியில் பரவலாக அழிவுகள் இடம்பெற்றிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல் தாக்குதலினாலேயே வீடுகள், கடைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. யாழ் நகர எல்லைக்குள் மட்டும் 150க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்தார்கள். வெளியே 1000க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. அகதி முகாம்கள் கூட செல்களால் தாக்கப்பட்டன. சென்பற்றிக்ஸ் கல்லூரியில் தங்கியிருந்த அகதிகளில் நால்வர் செல்லால் கொல்லப்பட்டனர். பாதைகளில் ஆங்காங்கே பிரேதங்கள் சிதைந்து போயிருந்தன. சில இடங்களில் மண்டையோடுகள், எலும்புக் கூடுகளும் காணப்பட்டன. ஊரடங்குச் சட்டத்தினால் பலர் பிரேதங்களை தமது வளவுகளுக்குள்ளேயே புதைத்திருந்தனர்.

ஆ.கு - பாதைகளில் ஆட்கள் நடமாட்டம் இருந்ததா? கடைகள் திறந்திருந்தனவா?

தேவ - அநேகமாக எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. பல கடைகள் உடைக்கப்பட்டு சாமான்கள் எடுக்கப்பட்டிருந்தன. பாதைகளில் வாகனப் போக்குவரத்து இல்லை. சைக்கிளில் போவதற்கு மட்டுமே மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். தூர இடங்களுக்குப் போக வேண்டியவர்களும் சைக்கிளில் வெள்ளைக் கொடி கட்டிக் கொண்டு போனார்கள் நடந்து செல்பவர்கள் கூட வெள்ளைக் கொடி பிடித்துக் கொண்டு போனார்கள். வீடுகளிலும் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சந்திக்குச் சந்தி இந்திய இராணுவத்தின் தடை முகாம்கள் இருந்தன.

ஆ.கு - யாழ் ஆஸ்பத்திரியின் நிலைமை எப்படியிருந்தது?

தேவ - பல பகுதிகள் இடிந்திருந்தன. தாதிமார்களின் நிலையங்களிலேயே பெரும்பாலான சிகிச்சைகள் நடைபெறுகின்றன. நோயாளிகள் ஏராளமாக இருந்தனர். இட வசதிகளில்லை. மருந்துகள் தட்டுப்பாடாயிருந்தன. செல் தாக்குதல்களினால் பல டொக்டர்கள் ஆஸ்பத்திரிக்கு வருவதில்லை. இந்தியாவிலிருந்து வந்துள்ள டொக்டர்மாரும் தாதிகளும் இப்போது சேவையிலீடுபட்டுள்ளார்கள்.

ஆ.கு - யாழ் நகர எல்லைக்கப்பால் நிலைமை எப்படியிருந்தது?

தேவ - உரும்பிராய், கோப்பாய், கொண்டாவில், கொக்குவில், சுதுமலை, மானிப்பாய் பகுதிகளில் பேரழிவுகள் ஏற்பட்டிருந்தன. மக்கள் வீடுகளிலிருந்து அகதிமுகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

ஆ.கு - அகதிமுகாம்களின் நிலைமை எப்படியிருந்தது?

தேவ - பெரும்பாலான முகாம்கள் உடனடியாக மாறியவையே. அதனால் அங்கு வசதிகள் எதுவுமிருக்கவில்லை. மலசலகூடங்கள் இல்லாத முகாம்களில் எல்லா இடங்களையும் ஆட்கள் பாவித்திருந்தார்கள்.

www.tamilarangam.net

அதனால் ஒரே தர்நாற்றமாகவும் சுப்பரவின்மையாகவுமிருந்தது. இதனாலேயே தொற்றுநோய்கள் சுலபமாகப் பரவின. வயிற்றோட்டம், சொறி, சிரங்கு போன்ற நோய்களால் பலர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். உணவு தயாரிப்பதற்கான எரிபொருள் தேவைக்காக பாடசாலைத் தளபாடங்கள் பாவிக்கப்பட்டிருந்தன.

ஆ.கு - மக்கள் உணவுக்கு என்ன செய்கிறார்கள்?

தேவ - இந்திய இராணுவமும், பொது ஸ்தாபனங்களும் உணவு விநியோகம் செய்கின்றன. நீண்ட வரிசையில் நின்று மக்கள் உணவைப் பெறுகிறார்கள். பெரும்பாலானவர்கள் ஒருநேர உணவே சாப்பிடுகிறார்கள். பலர் வெளியே வரப் பயந்து உணவைப் பெற்றுக் கொள்ளாமல் பட்டினியாக இருக்கிறார்கள். மின்சாரம் இல்லை. தண்ணீர் கூட குழாய்களில் வரவில்லை. மழைநீரைத்தான் தேக்கி வைத்து பாவிக்கிறார்கள்.

ஆ.கு - பாடசாலைகள் இயங்குகின்றனவா?

தேவ - அநேகமான பாடசாலைகள் அகதிமுகாம்களாக மாறியிருந்தன. மற்றப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. கல்வி தடைப்பட்டுள்ளது

ஆ.கு - யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் நிலைமை என்ன?

தேவ - மன்னாரில் இதுவரை இந்திய இராணுவத்தினரால் பெரியளவிலான தாக்குதல் எதுவும் நடாத்தப்படவில்லை. என்றாலும் பதட்டநிலை நிலவுகிறது. இயக்க மோதல்கள் இடம் பெறலாம் என்று மக்கள் அஞ்சுகிறார்கள். ஆயுதங்களை ஒப்படைத்து பொதுவாழ்வில் ஈடுபட முன்வந்த பல போராளிகள் மாற்று இயக்கத்தினரின் அடாவடித்தனங்களினால் மறுபடியும் இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள். இலங்கை இராணுவத்தினர் கடற்கரைக்கு வந்து தாரா சுட்டுக் கொண்டிருந்தார்கள் வவுனியா பகுதியிலும் மூளைக்காய்ச்சல் பரவிவருகிறது. சரும நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்குமிடையில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் வாகனங்களில் வருபவர்களிடம் கொள்ளையடிக்கப்படுகின்றன. வீடுகளிலும் கொள்ளை நடக்கிறது.

ஆ.கு - வடபகுதியிலிருப்பவர்களின் மனநிலை என்ன?

தேவ - மனோரீதியாகப் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குழந்தைகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எல்லோரும் பயந்து போயிருக்கிறார்கள். நோயின் கொடுமை ஒருபுறம். பட்டினி ஒருபுறம். குண்டுத் தாக்குதல்கள் இன்னொரு பக்கம். இவற்றினால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இனி என்ன நடக்குமோ என்று பயப்பிடுகிறார்கள். நிரந்தரமான

(தொடர்ச்சி 12 ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கனவை மிதித்தவன்

பார்த்திபன்

26

முத்து கட்டிலிலிருந்து எழுந்து போய் மேசையிலிருந்த போத்
திலைத் திறந்து, இரண்டு கண்ணாடிக் குவளைகளுக்குள் தோடம்பழ ரசத்தை
நிரப்பினான். கையில் எடுத்துக் கொண்டு வந்ததில் ஒன்றை ஞானத்திடம் நீ
ட்டி "இந்தா பிடி" என்றான்.

வேறு நினைவுகளில் மூழ்கிப்போன ஞானம் திடுக்கிட்டு "என்ன
டா?" என்றான்.

"பகலில நித்திரை கொள்ளாதை. இந்தா குடி. பாலகுமார்
எங்கே?"

அவர்களிருவரும் அப்போதுதான் பாலகுமார் அங்கில்லாததை
கவனித்தார்கள். கதவைத் திறக்கப் போனவன் எங்கே போய்விட்டான்
என்று யோசித்தார்கள்.

"முன்பாத்தி பாக்க வெளிக்கிட்டிருப்பான்" என்று சொல்லி
ஒரு வாய் குடித்த ஞானம் "உனக்கு எப்ப தன்டு வெட்டினது?" முத்து
வைக் கேட்டான்.

"ஆருக்குத் தெரியும். முதல் பாசை விளங்க வேணுமே. நெடு
க வந்து பாக்கிறாங்கள். ஊசி போடுறாங்கள். மருந்து தாறாங்கள். நல்ல
சாப்பாடும் தாறாங்கள். வேற ஒரு நோக்கத்தையும் காணேல" முத்து ச
லிப்போடு சொன்னான்.

"ஏன் அவசரப்படுவான். வடிவா மாத்திக் கொண்டு வரலாம்
தானே" என்று சொல்லிவிட்டு இன்னொரு மிடர் விட்டுக் கொண்ட ஞானம்
அன்று ஏன் அப்படி நடந்து கொண்டாய் என்று முத்துவைக் கேட்கலாமா
என்று நினைத்தான். பின்னர் அதைப் பிற்போட்டான். அன்றைய சம்பவம்
மறுபடி நினைவுக்கு வந்தது.

பொருட்கள், தளபாடங்கள் உடைந்தும், சிதறியுமிருக்க, பலர்
கூட்டமாக நிற்க, ஞானம் அவர்களை விலத்திக் கொண்டு உள்ளே பார்த்
தான்.

முத்து கட்டிலில் மயங்கியிருந்தான். மருத்துவர் அவனுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலது கையைப் பிடித்திருந்தார். வெள்ளையுடையணிந்திருந்த வேறு இருவர் தூக்கிச் செல்லக் கூடிய படுக்கையைத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

கூட்டத்துடன் நின்றிருந்த பாலகுமாரை தனியாக அழைத்துப் போன ஞானம் என்ன நடந்தது என்று விசாரித்தான்.

"ஒன்றும் தெரியேல. நாங்கள் குசினிக்க நின்டு கதைச்சுக் கொண்டிருந்தம். இவன் அறைக்குள்ள இருந்து றேடியோ நியூஸ் கேட்டுக்கொண்டிருந்தவன். கொஞ்ச நேரம் செல்ல அறைக்குள்ள, சத்தம் கேட்டுது. சாமான்கள் உடையுற சத்தம். ஏதேன் அலுமாரி விழுந்து போச்சோ என்டு ஓடிப்போய் பாத்தோம். அங்க இவன் எல்லாத்தையும் தள்ளி விழுத்திக் கொண்டிருந்தான். எங்களைக் கண்ட உடன கதிரையைத் தூக்கினான். எல்லாத்தையும் அடிச்சுடைச்சான். எங்களால அவனைப் பிடிக்கேலமா போச்சு. பிறகு மற்ற றூம் ஆக்களையும் கூட்டி வந்துதான் ஒரு மாதிரிப் பிடிச்சம். ஆள் உடன மயங்கிட்டுது. உடன அம்புலன்ஸ்க்கு அடிச்சம்." பாலகுமார் மூச்சு விடாமல் சொல்லி முடித்தான். சம்பவத்தை நேரில் பார்த்த பரபரப்பு அவனில் இன்னும் இருந்தது.

"என்ன நடந்திருக்கும். குப்பி அடிச்சிருப்பானோ?"

"சீ. இண்டைக்கு முழுக்க அவன் குடிக்கவேயில்லை. விடியத் தொடக்கமே ஒரு மாதிரித்தான் இருந்தவன். என்ன நடந்திருக்கும் என்டு எனக்கும் தெரியேல."

இருவரும் புரியாமல் அறையைப் பார்த்தார்கள். அம்புலன்ஸ் வண்டிக்காரர்களின் படுக்கைக்கு மாற்றப்பட்ட முத்து ஜாக்கிரதையாகத் தூக்கிச் செல்லப்பட்டான். மருத்துவர் கொஞ்சம் டொச் தெரிந்தவரிடம் விபரங்கள் சேகரித்துக் கொண்டிருந்தார்.

"என்னடா கனவு காணுறியே?" முத்து தோளை உலுப்ப ஞானம் மறுபடி திடுக்கிட்டான். 'இது என்ன தொத்து வியாதியா? முத்துவைப் போலவே எனக்கும் அடிக்கடி நினைவுகள் வருகுதே?.'

"ஒன்றுமில்லை" ஞானம் கையிலிருந்த தோடம்பழ ரசத்தைப் பருகினான்.

"அறையை விட்டுவெளியில வாறனியே?" எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறோம் என்பதை முத்து தெரிந்திருக்கிறானா என்பதை அறியவே ஞானம் இப்படிக் கேட்டான்.

"சாப்பிட, ரீ.வி பாக்க அறையை விட்டு வெளியில வரத்தானே வேணும். எனக்கு வெளியில போகவே பயம். ஆரைப் பாத்தாலும் பைத்தியக்காறர் மாதிரித்தான் தெரியுது. நான் என்னன்டு இதுக்க வந்து அம்பிட்டன் என்டு தெரியேல" முத்துவின் கவலையான பதிலால் ஞானம் திகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்படைந்தான். 'அப்ப தான் எங்க, ஏன் இருக்கிறனென்டு இவனுக்கு உண்மையாவே தெரியாதா? 'தெரிஞ்சால்....?'

ஞானம் மிகவும் கவலைப்பட்டான். அவனுடன் ஒன்றாக இருக்கும் நண்பனல்லாவா. அதுவும் ஒரே வயதினன்.

"நேரம் போகுது. பிறகு பஸ் எடுக்கிறது கஷ்டம். பாலகுமார் எங்க போட்டான்?" ஞானம் போவதற்குத் தயாரானான்.

தான் மீண்டும் தனிமைப்படப் போவதை நினைத்து முத்துவுக்குத் துக்கம் வந்தது. இவ்வளவு நாளும் இருந்த ஆரவாரமான இடமென்ன? இப்போது மாட்டிக் கொண்டிருக்கும் இடமென்ன?. முன்பு தொடர்ந்தரவாயிருந்த பலத்த பாட்டுச் சத்தங்களும், உரத்த ஆட்களின் தொனிகளும் இப்போது ஒலிக்க மாட்டாதா என்று ஏக்கப்பட்டான்.

"வா. வெளியில போய் ஆளைத் தேடுவோம்" ஞானம் சொல்லிக் கொண்டே அறையிலிருந்து வெளியே வந்தான். முத்துவும் பின்னால் வந்தான்.

விறாந்தையில் பாலகுமார் இல்லை. மற்றவர்கள் முன்பு போலவே அதே இடங்களிலும், நடமாடியும் அதே காரியமாக இருந்தார்கள்.

"எங்க போயிருப்பான்?" என்று ஞானம் முத்துவைக் கேட்க தனக்கெப்படித் தெரியும் என்பது போல முத்து தோளை அசைத்தான்.

இருவரும் கொஞ்ச நேரம் அப்படியே நின்றார்கள். அதில் பிரயோசனமில்லை என்று உணர்ந்ததும் ஒவ்வொரு அறையாகத் திறந்து பார்த்துக்கொண்டே போனார்கள்.

நான்காவது அறையைத் திறந்து பார்த்த இருவரும் அப்படியே திகைத்துப் போய்விட்டார்கள்.

(இன்னும் வரும்)

"வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை
அடைவதற்கான மனித இனத்தின் யுத்தத்தில்
எடுத்தாளப்படும் ஆயுதங்களில் ஒன்றாக கலை,
இலக்கியங்களும் இருக்கவேண்டும்."

— டானியல் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 கலம்: 1

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

அட்டை, ஓவியம்................ ரமணி

வெளியீடு.............. தென்னாசிய நிறுவனம்

முகவரி................... SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202 · 507156

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தென்னாசிய நிறுவனத்தின் சஞ்சிகையான 'தூண்டில்' மாதமொரு முறை வெளியாகிறது.

தூண்டிலைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 6 டி.எம். மேலதிகமாகும்.

வங்கி கணக்கு இல. KONTO NR. 26 85 40
STADTSPARKASSE WUPPERTAL
BLZ. 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL - 2
WEST GERMANY.